தமிழறிவோம்

தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை

தமிழறிவோம்

தமிழ்த்தொண்டர்

கோ. முத்துப்பிள்ளை

(தமிழ்நாடு அரசின் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது பெற்றவர்)

பூவழகி பதிப்பகம்

29/2, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு,

இராயப்பேட்டை, சென்னை - 600 014.

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	தமிழறிவோம்
நூலாசிரியர்	:	தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை
மொழி	:	தமிழ்
பொருள்	:	சொல் விளக்கம்
பதிப்பு	:	முதற் பதிப்பு : டிசம்பர், 2001
நூல் அளவு	:	18.5 x 12.5 செ.மீ.
பக்கம்		120
தாள்	:	11.6 கி.கி. வெள்ளைத்தாள்
படிகள்	:	1000
வெளியீடு	:	**பூவழகி பதிப்பகம்** 29/2, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
ஒளி அச்சுக் கோவை	:	**விக்னேஷ்வர் கிராபிக்ஸ்** 142, பெரிய தெரு, சென்னை - 600 005. போன் : 8510852
அச்சிட்டோர்		**மூவேந்தர் அச்சகம்** 29/2, சீனிவாச பெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014. போன் : 826 7189

விலை : ரூ. 30.00

காணிக்கை

என்னைத் தமிழ்த் துறைக்குத் தேர்ந்தெடுத்துப் பாராட்டிப் பெருமைகள் சேர்த்து, தமிழறிஞர் உலகில் எனக்கு ஓர் இனிய இடத்தை உருவாக்கித் தந்த, தமிழ் நாட்டரசின் ஆய்ந்துரைஞராகச் சிறப்புறப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள, ஆட்சித் துறைப் பேரொளி வே. கார்த்திகேயன் இ.ஆ.ப. அவர்களுக்கு இந்நூலினை அன்புக் காணிக்கையாக்கி அகம் மிக மகிழ்கின்றேன்.

தமிழ்த்தொண்டர்

வாழ்த்தி மகிழ்கின்றேன்

நற்றமிழ்க் கவிஞர் ந. பாபு
பொதுச்செயலாளர், முத்தமிழ் ஆய்வு மன்றம்
மாக்கவிபாரதி நகர், சென்னை – 600 039.

தமிழ்நாட்டில் இன்று வாழும் தமிழறிஞர்களில் நாள்தோறும் ஒரு சொல்லைத் தமிழ் உலகிற்கு வழங்கி வருபவர் **தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை** அவர்கள். ஆட்சிமொழிக் காவலர் **கீ.இராமலிங்கனார்** அவர்களுக்குப் பிறகு, அவர் ஆற்றிய பணியை அயராது செய்து வருபவர் தமிழ்த்தொண்டர் அவர்களென்று சொன்னால் மிகையாகாது. ''**நாளொன்று பிறக்க சொல்லொன்று அறிவோம்,**'' ''**தமிழறிவோம்**'' போன்ற நிகழ்ச்சிகள் மூலம் சென்னை வானொலியில் இவர் எடுத்தியம்பிய சொற் புதையல்கள் என்னை வியக்கச் செய்தன. மேலும், முத்தமிழ் ஆய்வு மன்றத்தில், அறிஞர் பெருமக்கள் புடைசூழ, ஒவ்வொரு சொல்லையும் ஆய்வு செய்து, இலக்கிய மேற்கோள்களை எடுத்துக் கூறிச்செல்லும் பாங்கு இவருக்கே உரியது.

''**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே**'' என்னும் பாரதியார் பாட்டின் பொருளை மெய்ப்பித்த பெருமை இவருக்கே உண்டு.

அகவை எண்பத்திரண்டு ஆகியும் ஆட்சிமொழியில் இவர் கொண்டுள்ள ஆர்வம் அளப்பரியது. ''எங்கும் தமிழ், எதிலும் தமிழென'' பள்ளிப் பருவம் முதல் பாட்டன் பருவம் வரை, இவர் பணி ஓயாது தொடரும் எனலாம். சில சொற்களைச் சொல்லி அவற்றை எடுத்தியம்பியவர் பாவாணர் என்றும், பாவலரேறு என்றும், திருவள்ளுவர் என்றும், அச்சான்றோர்களை நம் கண்முன் நிறுத்தும் பெருமை இவருக்கே உரிய ஒன்றாகும்.

அடிசிலகம், உந்துணவகம், நல்லாயிரம், பீடுணர்வு, புகழுரு போன்ற இவரது சொற்களை நெஞ்சில் நிறுத்தி மகிழலாம். இவை போன்ற பல சொற்களை இந்நூலில் படிக்கப் படிக்கப் பேருவகை பெற்றுப் பெரிதும் இன்புறலாம்.

''துறைதோறும் துறைதோறும் தமிழ் வளர்ப்போம் என'' முழங்கிய பாவேந்தரின் வரிகளுக்கு உயிரூட்டி வருபவர் இவரே.

''வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்''

என ஆக்கப் பணிக்காகத் தமிழ்த்தொண்டர் அவர்கள் தம்மைத் தமிழுக்காகவே மேன்மேலும் ஈடுபடுத்திக் கொள்ளும் பாங்கு போற்றுதற்குரியது எனப் பெருமையோடு நெஞ்சுயர்த்திச் சொல்லிக் கொள்வேன்.

அரசும் இவரது அரிய பணியினைக் கூர்ந்து நோக்கி, இவரது நாவில் பிறக்கும் சொற்களுக்கு நன்மதிப்பளித்து ஏற்றுக் கொண்டு, அவற்றைத் தமிழுலகிற்கு வழங்கி வருவது நமக்கெல்லாம் பெருமையளிக்கிறது; இவரது காலத்தில் நாம் வாழ்கிறோம் என்கிற பெருமையும், இவரோடு உறவாடி மகிழ்கிறோம் என்கிற மனநிறைவும் நமக்குண்டு. இத்துணைச் சிறப்புக்குரிய தமிழ்த்தொண்டர் அவர்களுக்கு ஒரு சொல்லுக்கு ஓர் இலட்சம் தரவேண்டுமென என் மனம் விரும்புகிறது. என் செய்வேன்! அரச குடும்பத்தில் பிறக்கவில்லையே.

இவரது பணி மேலும் சிறக்கவும் புகழ் ஓங்கவும் என் நெஞ்சார்ந்த நல் வாழ்த்துகள்.

(ஒம்) ந. பாபு

அணிந்துரை

பல்கலைச் செல்வர், பேராசிரியர் பா. மாணிக்கவேலு,
முன்னாள் பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

''**தமிழறிவோம்**'', தீந்தமிழ் ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு, தித்திக்கும் தேன்கூடு. தமிழ்த்தொண்டர் **கோ. முத்துப்பிள்ளை** அவர்கள் சென்னை வானொலியில் தொடர்ந்து வழங்கிய சொல்லோவியங்களின் எழுத்து வடிவமே இந்நூலாகும்.

தமிழ்த்தொண்டர் தஞ்சைத் தரணியில் தோன்றி, அறிவியல் பட்டம் பெற்று, தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளிலும், தமிழ்வளர்ச்சிக் கழகத்திலும் பல உயர்பதவிகளை வகித்து, சிறப்புற பணியாற்றிப் பணிநிறைவு பெற்ற நிலையில் மாக்கவி பாரதி நகரில் வாழ்ந்து வரும் தாமரை விழாக் கண்ட பெரியார், தமிழிலும் ஆங்கிலத்திலும் இணையான புலமை பெற்றுப் பணிக் காலத்திலும் பணி நிறைவு பெற்ற பின்னரும் தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் தொடர்ந்து தொண்டு செய்து வருகின்ற சான்றோர். இவரது தமிழார்வமும் தாய்மொழிப் பற்றும், நூலறிவும், நுண்மாண் நுழைபுலமும், நாவன்மையும், எழுத்தாற்றலும், ஆழ்ந்த சிந்தனையும், ஆய்வுத் திறனும் வியந்து போற்றுதற்குரியனவாகும். செந்தமிழ்ப் புரவலர் த.வே.உமாமகேசுவரனார், தனித்தமிழ்க் காவலர் மறைமலையடிகளார், தமிழ்த் தென்றல் திரு.வி.க, டாக்டர் மு.வ, ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் போன்ற தமிழ்ச்

சான்றோருடன் உறவாடும், உரையாடும் பேறு பெற்ற இவர், தமிழ்ப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதில் வியப்பில்லை.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் பட்டை தீட்டப் பெற்ற வைரமாய், பேரறிஞர் அண்ணாவின் ஆசிபெற்ற பாவலராய்த் திகழும் இவர், அன்புள்ளமும் அரவணைக்கும் குணமும், குறள்நெறிப் பற்றும் கோதிலா வாழ்வும் கொண்ட பண்பாளர்.

பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர், புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர் ஆகிய நாடு போற்றும் நான்கு தமிழக முதல்வர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்று, அரசுப் பணியுடன் தமிழ்ப் பணியும் செய்து பெருமை பெற்றவர். இவர் தமிழகத் தலைமைச் செயலகக் கோப்புகளில் முதலில் தமிழில் குறிப்பு எழுதிய பெருமையும், கூட்டங்களில் தமிழிலேயே உரையாற்றிய உணர்வும், பணியாளர் சங்கத்தின் தலைவராக இருந்தபோது அதன் பெயரைத் ''தமிழ்நாடு'' என்று மாற்றிப் புரட்சி செய்த பெற்றியும் இவரைச் சாரும்.

நீதியரசர் எஸ்.மகராாசன் தலைமையில் இயங்கிய மாநில (சட்டத்துறை) ஆட்சிமொழி ஆணையத்தில் பல்லாண்டுகள் சிறப்புப் பணியாற்றிப் பல சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்த பெருமையுடன், மூன்று உலகத் தமிழ் மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் படித்த சிறப்பும் இவருக்குண்டு ''**ஆட்சிமொழிச் சிந்தனைகள்**'' **அரியணையில் அழகு தமிழ்**'', ''**மொழிபெயர்ப்பு வேடிக்கைகள்**'' ஆகிய அரிய நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

தாம் வாழும் பகுதியில் ''**முத்தமிழ் ஆய்வு மன்றத்தை**'' நிறுவிப் பல ஆண்டுகள் தொடர்ந்து அருந்தமிழ்ப் பணியாற்றி வருகின்றார்.

அலைகடல் ஓரத்தில் நிற்பவனுக்கு நத்தை ஓடுகளும் கிளிஞ்சல்களும் தான் கிடைக்கும். ஆனால், ஆழ்கடலுள் மூழ்கி எழுபவனுக்கு நன்முத்தும் பவளமும் கிடைக்கும். அதுபோல் தமிழ்க்

கடலில் மூழ்கித் திளைக்கும் முத்துப்பிள்ளையவர்கள் முத்தான கருத்துகளையும் மணியான கலைச்சொற்களையும் அள்ளி அள்ளித் தந்தவண்ணமிருக்கிறார். அவற்றில் ஒரு சிலவே இந்நூலில் இடம் பெற்றுள்ளன. நல்லாயிரம், இளவர், மெய்ம்மறை, பீடுணர்வு, அறிந்தேற்பு, ஆபயன் போன்ற அருஞ்சொற்களும், அவற்றிற்கான அருமையான விளக்கங்களும் ஆசிரியரின் ஆய்ந்தறிதிறனையும், தமிழ்ப் புலமையையும் பறைசாற்றுகின்றன. அதுபோலவே ''திருவள்ளுவரின் ஐந்து உவமைகள்'' எனும் கட்டுரையில் உவமை அணி அழகும், ''ஒல்காப் புகழ் தொல்காப்பியம்'' எனும் கட்டுரையில் தொல்காப்பியனாரின் ஒன்பது எண் உறுதிப்பாடும், மலர்கள், மங்கையர் ஆகியோரின் பருவங்களின் பாங்கான விளக்கமும், மகளிர் அணிகலன்களையும் மலையின் வகைகளையும் குறிக்கும் அடுக்கடுக்கான அழகு பெயர்களும் தமிழின் தொன்மையை, வலிமையை, இனிமையை, இளமை மாறாத் தன்மையை, வற்றாத ஊற்றாய் விளங்கும் விந்தையை இச்சிறு நூல் சிறப்பாய் விளக்குகின்றது.

''நல்ல நூல் என்பது எழுத்துச் சொற்பொருள்களால் ஆன ஏடுகள் அடங்கிய ஒன்று அன்று; நமக்காகக் காத்திருக்கின்ற பெருந்தகையின் திருவுருவம் அது எனலாம்'' என்று மாமேதை டாக்டர் மு.வ.கூறியதைப் போன்று இந்நூலில் என்றுமுள தென்தமிழின் பெருமையை நமக்குணர்த்த, தமிழ்த்தொண்டரின் திருவுருவம் காத்திருக்கிறது. கண்டு இன்புறுவோம். படித்துப் பயன்பெறுவோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்த்தொண்டர்தம் புகழ்!!

❀

சொல்லாக்கச் செம்மல் வாழ்க பல்லாண்டு

முத்தமிழ் மணி மு. மணி
அமைப்புச் செயலாளர், முத்தமிழ் ஆய்வு மன்றம்

சீர்மணக்கும் தஞ்சை சிறப்புமிகும் எங்களின்
பேர்மணக்கும் நன்முத்துப் பிள்ளையிவர் – ஊர்மணக்கத்
தார்மணக்கும் தோளுடையார் தண்டமிழின் சொல்லாய்ந்தே
பார்மணக்கத் தந்திடுவார் பார்.

ஊரேந்தும் நற்கொள்கை உள்ளதெலாம் தானேந்திச்
சீரேந்தும் நற்றமிழில் செப்புதற்கே – பாரேந்தும்
கோமுத்துப் பிள்ளைக்கே கொஞ்சுதமிழ்ச் சொற்களெலாம்
பூங்கொத்தாம் என்றே புகல்.

வள்ளுவத்தின் சீர்பரவும் வான்முத்துப் பிள்ளையிவர்
நல்முத்துச் செந்தமிழை நாடியே – சொல்முத்தின்
மாட்சிநிகர் சொல்வடிக்கும் மாண்புயர்வுத் தொண்டினால்
ஆட்சிச்சொல் தான்படைப்பார் ஆய்ந்து.

வேண்டும் பொழுதெல்லாம் வெண்பா படைத்திடுவார்
தூண்டும் தமிழுள்ளம் தூக்கமின்றி – யாண்டுமிவர்
நல்லதமிழ் ஆய்ந்தெடுத்தே நாளும் வளர்க்கின்ற
சொல்லாக்கச் செம்மலெனச் சொல்.

வெடிச் சிரிப்பு வேந்தரிவர் வேட்கைமிகு பண்பால்
குடிவாழ் தனித்தமிழ்க் கோமான் – நெடியபுகழ்த்
தொண்டால் வளர்க்கின்றார் தூய தமிழ்மன்றம்
கண்டார் மகிழ்கின்றார் காண்.

என்னை ஊக்கப்படுத்திவரும்

சான்றோர் பெருமக்கள்

1. கவிச் சக்கரவர்த்தி, செவாலியர்,
டாக்டர் வி.ஜி.சந்தோசம்,
வி.ஜி.பி. நிறுவனங்களின் தலைவர்,
சென்னை – 15.

2. செந்தமிழ்க் காவலர், சிரோமணி,
டாக்டர் வி.ஜி.செல்வராஜ்,
வி.ஜி.பி. நிறுவனங்களின் துணைத் தலைவர்,
சென்னை – 15.

3. சிந்தாமணிச் செம்மல், பேராசிரியர்,
முனைவர் **த.பெரியாண்டவன்,**
தனி அலுவலர், வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம்,
சென்னை – 15.

4. அறிவியல் சொல்லாக்கச் செம்மல்,
நாவேந்தர், **டாக்டர் வே.ப.நாராயணன்,**
துணைவேந்தர், அரசினர் பொது மருத்துவமனை
நிகர்நிலைப் பல்கலைக் கழகம்,
சென்னை–3.

5. பாவலரேறு, பேராசிரியர் **ச.பாலசுந்தரனார்,**
தாமரை வெளியீட்டகம், 367, மேல வீதி,
தஞ்சாவூர் – 9.

6. வள்ளுவ மாமணி, **புலவர் என்.இ.இராமலிங்கம்,**
தலைவர், திருவள்ளுவர் கழகம்,
ஆதம்பாக்கம், சென்னை – 88.

7. சொற்றமிழ் வித்தகர்,
முனைவர் **சுந்தரம் ஆவுடையப்பன்,**
நிகழ்ச்சிப் பொறுப்பாளர்,
மதுரை வானொலி நிலையம், மதுரை – 2.

8. மழலைக் கவிமணி **பி.வி.கிரி,**
துணைத் தலைவர்,
குழந்தை எழுத்தாளர் சங்கம்,
சென்னை – 106.

என்னுரை

சென்னை வானொலி நிலையத்தார்க்கு நான் முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்கள் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, எனக்குப் பல்வேறு அரிய வாய்ப்புகளை வழங்கி வருகிறார்கள். "நாளொன்று பிறக்க சொல்லொன்று அறிவோம்" என்னும் புதிய நிகழ்ச்சித் தொடரில் எனக்கு எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கிச் சிறப்பித்தார்கள். அதே போன்று பேறறிஞர்கள் பங்கு பெறுகின்ற **"தமிழறிவோம்"** என்னும் நிகழ்ச்சித் தொடரிலும் எனக்கு இருமுறை வாய்ப்பு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

சொற்றமிழ் வித்தகர், முனைவர் சுந்தரம் ஆவுடையப்பன் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். பேரறிஞராகத் திகழ்கின்ற அவர், சொல்லாக்க நிகழ்ச்சிகளில் எனக்கு முன்னுரிமை கொடுத்தார் என்றுதான் கூறவேண்டும்.

யான் வழங்கிய விளக்கங்கள், இரு பிரிவுகளாக, தமிழைப்பற்றிய பொதுவான கருத்துகளாகவும் நுட்பமான சொல்லாக்கச் செய்திகளாகவும் அமைந்தன. அறிஞர் உலகு என்னைப் பாராட்டி மகிழ்ந்தது. ஆகையால் இந்த நூலை வெளியிட நான் துணிந்தேன்.

மற்றும் இலக்கியச்சுடர் மூவேந்தர் முத்து அவர்களும், கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் அவர்களும், என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்தி வருகின்றார்கள். அவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்.

சொல்லாக்கத் துறையில் என்னைப் பல்லாற்றானும் பாராட்டி வருகின்ற பேரறிஞர் பெருமக்களையெல்லாம் நான் இந்த நேரத்தில் நினைவு கூர்கின்றேன். குறிப்பாக முத்தமிழ் ஆய்வு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் என்னைப் பெரிதும் பாராட்டி, வாழ்த்துக் கூறி, ஊக்குவித்து வருகிறார்கள்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள அருந்தமிழ்க் குறிப்புகள் அனைத்தையும் சரிபார்த்துக் கையெழுத்துப் படிகளை ஆயத்தம் செய்து கொடுத்த இலக்கணச் செல்வர், வல்வில் ஓரி பா. கிருட்டிணமூர்த்தி, பைந்தமிழ்ச் செல்வர் ப. புருடோத்தமன், முத்தமிழ்ச் செல்வி சு. லோகநாயகி மற்றும் பழந்தமிழ்ப் புலவர் த. பரமசிவன், தமிழ்ப் பெரும் புலவர் ப. கோவிந்தசாமி ஆகியோர்க்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலினை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த இலக்கியச் சுடர் மூவேந்தர் முத்து அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

தமிழ்த் தொண்டர் **கோ. முத்துப்பிள்ளை**

பதிப்புரை

தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை அவர்கள் தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டாற்றி வருகிறார்கள். பிறமொழி கலந்த சொற்களுக்கும் ஆங்கிலத்திற்கும் தெளிவாகத் தமிழ்ச் சொற்களை வாரி வழங்குகிறார். இந்தத் தொண்டைத் தமிழர்கள் போற்றி வணங்கிப் பாராட்ட வேண்டும். தமிழ் மூவேந்தர் முரசு திங்கள் இதழில் 'கவினார்ந்த கலைச் சொற்கள்' வழங்கி அந்த இதழுக்குப் பெருமை சேர்த்தார்கள். படித்தவர்கள் அனைவரும் மெத்தப் பாராட்டினார்கள்.

'தமிழறிவோம்' என்னும் இந்த நூலில் மேலும் பல அருமையான விளக்கங்களை வழங்கியிருக்கிறார்கள் தமிழ்த் தொண்டர் அவர்கள். இன்றையத் தலைமுறையினர் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டிய ஒரு கருவூலமாகும். தமிழால் என்ன செய்ய முடியும் என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இதைப் படித்தால் மேலும் மேலும் என்னென்ன செய்து வளம் பெறலாம் என்பதற்கு இந்நூல் பெரும் உதவியாக இருக்கும்.

எங்கள் மதிப்புக்குரிய அண்ணன் தமிழ்த் தொண்டர் கோ. முத்துப் பிள்ளை அவர்கள், எண்பத்திரண்டாவது வயதிலும் இப்படி ஒரு நூலை எழுதித் தமிழ்ப் பெருமக்களுக்கு வழங்குகிறார். அவரின் தமிழ்த் தொண்டை எண்ணிப் பெருமைப்படுகிறோம்; வணங்குகிறோம்.

'தமிழறிவோம்' என்ற நூலை எங்கள் பதிப்பகம் வாயிலாக வெளியிடுவதைப் பெருமையாகக் கருதுகிறோம். எங்கள் பதிப்பகத்தின் மூலம் வெளியிடுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி யையும் தெரிவித்து மகிழ்கிறோம். வாழ்த்துரையும், பாராட்டுரையும் வழங்கியுள்ள பெருமக்கள் கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன், நற்றமிழ்க் கவிஞர் ந. பாபு, பல்கலைச் செல்வர், பேராசிரியர் பா. மாணிக்கவேலு, முத்தமிழ்மணி மு. மணி ஆகியோருக்கு எங்கள் நன்றியினைத் தெரிவித்து, ஆதரவு தரும் தமிழ்ப் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்,

மூவேந்தர் முத்து

பொருளடக்கம்

1. கலைக்கலன் செய்பவர் 17
2. உந்துணவகம் 19
3. நேர்வு விடுப்பு 20
4. இலக்கணத் தாத்தா 22
5. முதுகண் 24
6. கோரெண் 25
7. தலைமைச் சாலை 27
8. அரிய பழமொழி 29
9. இணைந்த இல்லம் 31
10. கைச்சிட்டை 33
11. ஒமல் 35
12. அவையல் கிளவி 37
13. கட்டளைச் சொற்கள் 38
14. ஏற்பிசைவு 40
15. திட்டப் பெயர்கள் 41
16. திருவளர் செல்வன் 42
17. பட்டிகைப் படிப்பு 43
18. அகர முதல் னகர இறுவாய் 44
19. கோவையாகப் பேசினார் 45
20. பணி நிறைவுப் பாராட்டு விழா 46
21. சட்ட வகைகள் 47
22. சுழியம் 49
23. மெய்ப்பு 50
24. ஏமம் 51
25. முதுவர் 53
26. வரைந்து வைத்தல் 55
27. உடன் – மருகர் 56
28. பழக்கத்தின் வலிவு 57
29. அறிந்தேற்பு 58
30. சேமச் சக்கரம் 60

31.	ஐந்து உவமைகள்	61
32.	விழுமியார் உடன்பாடு	63
33.	ஒட்டனுக்கு மேல் உறவில்லை	64
34.	வலிமை பெருக்கி	66
35.	மகளிர் அணிகலன்கள்	68
36.	ஓசிக்கு ஆசி கூறுவோம்	70
37.	சேர்ப்பு அறிவுரை	72
38.	பொருள் தெரிய வேண்டுமே	74
39.	செறிவு வட்டு	75
40.	காதன்மை	76
41.	பதின் பருவம்	78
42.	செயலாளர்	80
43.	மலையின் வகைகள்	81
44.	கருந்தளிக்குநர்	83
45.	செவ்வி	84
46.	மருத நிலத்தின் மாண்பு	85
47.	சால மிகுதி, சாலக் குறைவு	87
48.	பால் மாறுதல்	89
49.	தொடர் கோப்பு	91
50.	மலரின் பருவ நிலைகள்	93
51.	அடிப்பீட மின்விசிறி	95
52.	கலைப்புல முதல்வர்	97
53.	ஒட்டாரம்	99
54.	இளைப்பாற்றிக் கொள்ளுதல்	101
55.	அடிசிலகம்	103
56.	பாதுகாப்புப் பெட்டகம்	105
57.	வீற்றிருத்தல்	106
58.	வாழ்க்கைக் குறிப்புகள்	108
59.	அணியம்	109
60.	தமிழ்ச் சொல்லின் தனிச்சிறப்பு	111
61.	ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியம்	113
62.	நல்லாயிரம்	115

கலைக்கலன் செய்பவர்

என்னுடைய பேருந்து நண்பர் ஒருவர் ஒரு வினாவினைத் தொடுத்தார். **Furniture - Maker** என்பதற்குத் தமிழ் என்ன என்பதே அந்த வினாவாகும். அத்துடன் அவர் நிற்கவில்லை.

Cabinet Maker என்பதற்கும் தமிழ் என்ன என்று சொல்ல வேண்டும் என்றார். **Furniture** என்பதற்கு ஏற்கெனவே நல்லதொரு மொழிபெயர்ப்பு அமைந்துவிட்டதே என்று எண்ணலானேன். தொடக்கத்தில் சிக்கல்கள் இருக்கத்தான் செய்தன. தட்டுமுட்டுப் பொருள்கள், மரச் சாமான்கள், மேசை நாற்காலி போன்ற பொருள்கள், வீட்டுத்தளவாடங்கள் என்றெல்லாம் சொல்லிப் பார்த்துப் பொருந்தவில்லையே என்று கவலை கொண்டோம்? கடைசியாகக் கிடைத்தது, ஒரு கவினார்ந்த மொழிபெயர்ப்பு. வீட்டிலேயுள்ள அறைகளுக்கு அழகூட்டும் பொருள்கள் என்னும் கருத்திலே அறைகலன் என்று அமைத்தோம். மேசை, நாற்காலி போன்றவை இன்று மரத்தினால் மட்டும் செய்யப் பெறுபவை அல்ல. மரம் அல்லாத எஃகு போன்ற எத்தனையோ வேறு வகையான பொருள்களாலும் கூடச் செய்யப் பெறுகின்றன. அவை அனைத்துக்கும் பொருந்துகின்ற அழகிய பெயர்தான் ''**அறைகலன்**''. அவ்வாறாயின் **Furniture - Maker** அறைகலன் செய்பவராகிறார்.

ஆயினும் நண்பரின் முக்கியமான வினா, **Cabinet Maker** என்பவர் யார் என்பதுதான். **Cabinet - Maker** என்பதற்குரிய விளக்கம் **A skilled maker and repairer of fine Furniture** என்பதாகும்.

Fine Furniture என்பதை ''**கலை நுட்பம் வாய்ந்த அறைகலன்**'' என்று சொல்லலாமல்லவா? இப்போது நாம் ''கலம்செய் கோவே கலம்செய் கோவே'' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலை நினைவுக்குக் கொண்டு வருதல் வேண்டும். ஈமத்தாழி செய்பவரைக் ''கலம் செய்கோ'' என்று குறிக்கின்றார் புலவர். இப்பொழுது தெரிகிறது. ''**கலைக்கலன் செய்பவரே**'' **Cabinet Maker** ஆவாரல்லவா?

Furniture - Maker	=	அறைகலன் செய்பவர்.
Cabinet-Maker	=	கலைக்கலன் செய்பவர்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

உந்துணவகம்

சீருந்துகளில் வெளியூர்ப் பயணம் செல்பவர்கள் ஆங்காங்கே தங்கி இளைப்பாறிச் செல்வது வழக்கம். இதற்கென்று கட்டட வசதிகளும், சீருந்துகளை நிறுத்துமிடங்களும் ஆங்காங்கே செய்யப்பட்டுள்ளன. இத்தகைய விடுதிகளுக்கு ஆங்கிலத்தில் MOTEL என்று பெயர். இந்தப்பெயர் அமைந்துள்ள நுட்பத்தை எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

ஏனெனில் HOTEL என்னும் சொல் நமக்குத் தெரியும். இந்த HOTEL என்னும் பெயர் எவ்வாறு MOTEL ஆக்கப்படுள்ளது என்பது விந்தையினும் விந்தையாகும். HOTEL என்னும் சொல்லிலே உள்ள H என்னும் முதலெழுத்தை எடுத்துவிட்டு அந்த இடத்தில் M என்னும் முதலெழுத்தை அமைத்துவிட்டார்கள். ஏன் தெரியுமா ?

மோட்டாரில் செல்பவர்கள் பயன்படுத்தும் உணவகமே MOTEL ஆகும். MOTORIST HOTEL என்பதுவே அதற்குரிய விளக்கமாகும். இதனை நாம் '' உந்துலாவினர் உணவகம்'' என்று நேருக்கு நேர் மொழிபெயர்த்து விடலாம். ஆயினும் ஆங்கிலத்தைப் போன்ற சுருக்கமான முறையை நாமும் பின்பற்றலாமே! அவ்வாறாயின் உந்துலாவினர் உணவகம் என்பதற்கு ''**உந்துணவகம்**'' என்னும் உயர்ந்த மொழிபெயர்ப்பை அமைத்து விடலாமே! தமிழ் மொழியில் இல்லாத தொன்றில்லை. இருப்பதைக் கற்றுக் கொள்வது நம் கடமையாகும்.

நேர்வு விடுப்பு

Holiday என்பதற்கு **"விடுமுறை"** என்னும் அழகிய பெயர் அமைந்திருக்கிறது. இதே போன்று **Leave** என்பதற்கு **"விடுப்பு"** என்னும் இனிய பெயர் அமைந்துள்ளது. **Earned Leave, Unearned Leave, Medical Leave, Casual Leave** என விடுப்புகள் பலவகைப்படும். இவற்றுள் **Casual Leave** என்னும் விடுப்புக்குப் பல்வேறு மொழிபெயர்ப்புகள் அல்லது விளக்கங்கள் இருக்கின்றன.

சில்லறை விடுப்பு, சிறு விடுப்பு, தற்செயல் விடுப்பு, நேர்வு விடுப்பு என்பன போன்ற மொழிபெயர்ப்புகள் இருக்கின்றன. இவற்றை எண்ணிப் பார்க்கும்போது, தமிழ்மொழியின் வளமை தெற்றென விளங்கும். நல்ல மொழிபெயர்ப்புகள், சிறிது சிறிதாகச் செப்பம் பெற்று வருவதையும் நாம் உணர்ந்து மகிழலாம். சில்லறை விடுப்பு என்பதைவிடச் சிறு விடுப்பு சிறப்பாக அமைகின்றது.

சிறு விடுப்பு என்பதைவிடத் ''**தற்செயல் விடுப்பு**'' மேலும் சிறப்பாக விளங்குகின்றது.

தற்செயல் விடுப்பு என்பதைவிட எல்லாவற்றுக்கும் மேலாக ''**நேர்வு விடுப்பு**'' நேர்த்தியாக விளங்குகின்றது. எதிர்பாராமல் ஏதோ ஒன்று நேர்ந்துவிடுகின்றது. அலுவலகத்துக்கு வர இயலவில்லை என்று எண்ணிப் பார்த்தால், இதுவே எழில்மிகு மொழிபெயர்ப்பு என்பதை அறிந்துகொள்ளலாம்.

நண்பர் ஒருவர் Casual Leave கோரி கடிதம் ஒன்று எழுதினார். "நேற்றிரவு முதற்கொண்டு எனக்கு வயிற்றுப் போக்காக உள்ளது. ஆகவே இன்று ஒரு நாள் மட்டும் ''சிருவிடுப்பு'' தருமாறு வேண்டுகிறேன்'' என்று எழுதியிருந்தார். இந்த நல்ல கடிதத்தில் ''சிறு'' என்னும் சொல்லில் இடையினத்தைப் பெய்து எழுதிவிட்டார். சின்ன விடுப்பாக இருப்பதால் சின்ன ''ரு'' போட வேண்டுமென்று எண்ணிவிட்டார் போலும். பெரிய என்னும் சொல்லில் இடையினம் வரவேண்டுமல்லவா? இடையினமும் வல்லினமும் இடம் மாறிவிட்டால் இடையூறுகள் இடம் பிடித்துக் கொள்ளுமே!!

❀

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

இலக்கணத் தாத்தா

இலக்கணத் தாத்தா மகாவித்துவான் மே.வி. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் அரிய இலக்கிய இலக்கணச் செய்திகளை எடுத்து விளக்கி இன்பமூட்டினார். ''**நாள்**'' என்னும் சொல்லின் பன்மை வடிவம் ''**நாள்கள்**'' என்றுதான் இருத்தல் வேண்டுமென்று அவர் வலியுறுத்தி வந்தார். நாட்கள் என்று எழுதினால் ''**அன்று இறக்கிய கள்**'' என்றாகிவிடும் என்றும் எடுத்துக் காட்டினார்.

''**தோப்பு**'' என்பதன் பன்மையும் ''**தோப்புகள்**'' என்றுதான் இருத்தல் வேண்டும். தோப்புக்கள் என்று எழுதினால் ''**தோப்பிலே இறக்கிய கள்**'' என்றாகிவிடும். இதேபோன்று **வகுப்பு - வகுப்புகள்** என்றும், **முத்து - முத்துகள்** என்றும், வருதல் வேண்டும். ஈண்டு, ஒருமை, பன்மையாக மாறும்போது புணர்ச்சி இலக்கணம் செயற்படமாட்டாது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவில் இக்கருத்துகளுக்கு ஏராளமான ஆதாரங்களை எடுத்துக் காட்டியுள்ளார் அவர்.

சந்தி இலக்கணத்தைச் சிந்தித்துச் செயற்படுதல் வேண்டும். இல்லையெனில் பொருள்கள் மாறிக்கொண்டே போய்விடும். **மலர் + கை = மலர்கை, மலர்க்கை, மலக்கை** என்று வரும்போது பொருள்கள் எவ்வாறு மாறிவிடுகின்றன என்பதை உணர்ந்து கவனமாகச் செயற்படுதல் வேண்டும்.

மருத்துவமனைகளில் **Ortho Paedic Department** என்னும் ஒரு துறையும் இருக்கிறதல்லவா? இந்தத் துறையை இப்போது ''**எலும்பு முறிவுத் துறை**'' என்று எழுதி வைத்துள்ளார்கள். எலும்பானது வலிய பொருளாயிற்றே என்னும் காரணத்தால் வல்லினத்தைக் கையாண்டுள்ளார்கள். எனினும் நம் முன்னோர்கள் ஒலியின் நுட்பத்தை உணர்ந்து ஏற்ற எழுத்தினைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

''**உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
இடைக்கண் முரிந்தார் பலர்''.

ஈண்டு இடையினத்தையே வள்ளுவப் பெருந்தகை வழங்கியுள்ளார் என்பதை நாம் கண்டுகொள்கின்றோம். எனவே ''**எலும்பு முறிவுத் துறை**'' இனிமேல் இடையினத்தையே ஏற்று ''**எலும்பு முரிவுத் துறை**'' என்று இனிக்கப் பேசலாமல்லவா?

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

முதுகண்

நான் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதில் ''**கட்டாயம்** '' என்னும் சொல்லும் இடம் பெற்றிருந்தது. அந்தக் கட்டுரையைப் படித்த நண்பர் '' இதென்ன, இந்த அருமையான கட்டுரையில் கட்டாயம் என்னும் பேச்சுவழக்குச் சொல்லைப் பயன்படுத்தியிருக்கின்றீர்களே'' என்று கேட்டார். நண்பரின் அறியாமை என்னை நடுங்கச் செய்தது. கல்வெட்டுகளிலே காணக்கிடைக்கின்ற கட்டித் தங்கம் போன்ற சொல்தான் ''கட்டாயம்'' என்னும் சொல். '' **ஆயம் கட்டுதல்**'' என்னும் சொல் தலைகீழாக மாறி, கட்டாயம் என்று ஆகியுள்ளது. அரசனுக்கு ஆயம் கட்டுதல் எவ்வாறு தவறாமல் நிகழ்தல் வேண்டுமோ அதைப்போன்ற கருத்தையுடையதுதான் கட்டாயம். இந்த அரிய கருத்தாழமிக்க சொல்லை நாம் போற்றிக் காத்தல் வேண்டுமல்லவா ?

இன்னொரு சொல்லையும் ஈண்டுக் காண்போம். திருவானைக்கா கல்வெட்டிலே ''**முதுகண்**'' என்னும் அரிய சொல் அமைந்து கிடக்கின்றது.

''முதுகண்'' என்றால் முதுமையான கண் என்று சொல்லத் தேவையில்லை. இளைய கண்ணுக்கு எதிர்ப்பதம் முதுமையான கண். இளைய கண்ணால் இந்த உலகத்து வஞ்சனைகளையெல்லாம் அறிந்துகொள்ளுதல் முடியாது! ஆனால் முதிய கண்ணோ ஆழ்ந்து பார்க்கும் அருந்திறலுடையது. இளைய கண்ணுக்கு முதிய கண்ணின் துணை தேவையாகும். தக்கவயது வாரா இளைஞர்களுக்கு உதவியாக இருப்போரை Guardian ''**காப்புப் பொறுப்பாளர்**'' என்று நாம் இன்று கூறுகின்றோம். Guardian என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ''முதுகண்'' என்னும் தமிழ்ச் சொல் எத்துணை இனிமையாகப் பொருந்துகிறது என்று எண்ணி எண்ணி இன்புறலாம்.

கோரெண்

ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்கள் ஆட்சித் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார். அவர் செய்துள்ள புதுமையான சொல்லாக்கங்கள் அறிஞருலகைப் பெரிதும் கவர்ந்துள்ளன. Calendar என்னும் சொல்லை அவர் ''**காலந்தேர்**'' என்றுதான் சொல்லுவார். காலத்தைத் தேர்ந்து கொள்வதற்கான அட்டவணை ''**காலந்தேர்**'' என்று விளக்கங் கூறுவார்.

இதேபோல மேன்மை தங்கியவர் மேயர் என்று கூறுவார்.

எல்லாவற்றுக்கும் மேலாக Quorum என்பதற்குக் ''**கோரெண்**'' என்று அவர் சொல்லியவுடன் அதைப் பலரும் மறுக்கத் தொடங்கினர், ஏளனம் செய்தனர். எனினும், ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, இதுவே சிறந்த மொழிபெயர்ப்பு என்று அரசாலும் அறிஞருலகாலும் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளது.

''**கூட்டத்துக்கான குறைவெண் வரம்பு**'' Quorum என்று சொல்லப்பட்டது. ஆனால் இராமலிங்கனாரோ "ஒரு கூட்டம் நடைபெறுவதற்குக் கோரப்படும் அல்லது தேவைப்படும் எண்ணிக்கை 'கோரெண்' தானே" என்று எடுத்துக் காட்டினார். இயலுமிடங்களிலெல்லாம் ''ஒலியின் ஒப்புமையும்'' அமையுமாறு பார்த்துக் கொள்வார்.

Tutorial College என்பதற்குத் ''**தோற்றோரியல் கல்லூரி**'' என்னும் மொழிபெயர்ப்பைத் தந்து பெரும் புரட்சியை ஏற்படுத்தினார், இராமலிங்கனார். கூட்டங்களில் பேசுவோர், இதன் அருமையைப் பாராட்டாதார் யாருமே இல்லை.

ஒரு நாள் அவரிடம் இதைப்பற்றி நான் கேட்டேன். அதற்கு அவர் ''**தனிப் பயிற்சிக் கல்லூரி**'' என்பதுதான் சரியான விளக்கம். ஆயினும் நகைச்சுவைக்காக நான் ''**தோற்றோரியல்**'' கல்லூரி என்று கூறினேன் என்று தெளிவுபடுத்தினார்.

Underground drainage என்பதற்குப் ''**புதை சாக்கடை**'' என்னும் மொழியாக்கத்தைக் கண்டுபிடித்தவர் அவரேயாவார். அது ஒரு சுவையான வரலாறு. கிராமவாசி ஒருவர் தற்செயலாகச் சொல்லிய அச் சொல்லைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டார் ஆட்சி மொழிக் காவலர்.

ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

தலைமைச் சாலை

இப்போது எங்கு பார்த்தாலும் பெரிய நகரங்களைச் சுற்றிலும் சிறிய நகரங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அளவு மீறிய மக்கள் தொகைப்பெருக்கம் விளை நிலங்களைக்கூட வீடுகளாக மாற்றிவருகின்றது. புதிய நகரங்களை **Colony** என்று கூறுகின்றோம். **City** மாநகரமாக இருக்கிறது. **Town** நகரமாக இருக்கிறது. எனவே **Colony** என்பது நகர் என்று ஆகலாம். இத்தகைய புதிய நகர்களில் பல்வேறு சாலைகள் அமைந்துள்ளன. குறுக்குச் சாலை, இணைப்புச் சாலை, நிழற்சாலை, தலைமைச் சாலை என்று பெயர்கள் வைக்கப்பெற்றுள்ளன. இந்தச் சாலைகளின் பெயர்கள் எழுதப் பெறும்போது, தேவையான இடங்களில் வல்லினம் மிகுதல் வேண்டும். வல்லினம் மிகாமல் குறுக்கு சாலை என்று எழுதுவது தமிழ் மொழிக்கு ஊறு தேடுவதாக முடிந்துவிடும்.

இந்தச் சாலைகளுக்கெல்லாம் தமிழறிஞர்களின் பெயர்களைச் சூட்டுவது சாலச் சிறந்ததாகும். எடுத்துக்காட்டாகப் பெரிய சாலைகளுக்குத் தொல்காப்பியர் சாலை, திருவள்ளுவர் சாலை, இளங்கோ சாலை, கம்பர் சாலை என்று பெயர் சூட்டலாம். குறுக்குச் சாலைகளுக்குப் பாரதியார் சாலை, பாவேந்தர் சாலை போன்ற பெயர்களைச் சூட்டலாம்.

Main Road என்பதற்கு இப்போது சில இடங்களில் ''**மெயின் சாலை**'' என்று எழுதியுள்ளார்கள். வேறு சில இடங்களில் ''**பிரதான சாலை**'' என்று வைத்துள்ளார்கள். இப்போது நாம் Main File என்பதை எடுத்துக் கொள்வோம். அதனைத் ''**தலைக்கோப்பு**'' என்று குறிக்கின்றோம். Main Gate என்பதைத் ''**தலைவாயில்**'' என்று பேசுகின்றோம். அவ்வாறாயின் Main Road என்பது ''**தலைமைச் சாலை**'' என்றுதானே ஆக வேண்டும். தமிழை அறிவோம். தமிழ் முறையைப் பின்பற்றுவோம்.

Main Road = தலைமைச் சாலை

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

அரிய பழமொழி

அரசு தலைமைச் செயலகத்தில் நான் பணியாற்றி வந்த போது, அங்கு பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கு ''**ஆட்சி மொழி**'' வகுப்புகளை நடத்தும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒவ்வொரு வகுப்பு முடிந்த பிறகும், மாணவர்கள் சில ஐய வினாக்களை எழுப்புவர். அவற்றுக்கு விடை கூறும்போது, தமிழின் பெருமை தெற்றென விளங்கித் தோன்றும். ஒரு நாள், மாணவர் ஒருவர் ஒரு வினாவைத் தொடுத்தார். ஐயா **Slow and steady wins the race** என்னும் ஆங்கிலப் பழமொழியை ''**அழகு**'' குன்றாமல் தமிழில் மொழிபெயர்க்க முடியுமா ? என்று கேட்டார். ''**அழகு குன்றாமல்**'' என்பதுதான் அவர் கேட்ட வினாவின் முக்கியமான பகுதியாகும். மெதுவாகவும் நிதானமாகவும் ஓடினால் பந்தயத்தில் வெற்றி பெறலாம் என்று சொல்லிவிடலாம். ஆனால், அது அம் மாணவருக்கு மனநிறைவை அளிக்காது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் இணையான பழமொழிகள் இருக்கின்றனவல்லவா ?

Love is blind – ஆசை வெட்கம் அறியாது.

Familiarity breeds contempt – பழகப் பழகப் பாலும் புளிக்கும். இத்தகைய இணையான பழமொழி கிடைக்குமா என்று எண்ணலானேன்.

ஒரு நாள் பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார் என் அலுவலக அறைக்கு வருகை புரிந்தார். இதுவே தக்க தருணம் என்று ஆங்கிலப் பழமொழியை எடுத்து நீட்டி அருந்தமிழ் வடிவம் கேட்டேன். அப்பாத்துரையாரோ புன்முறுவல் பூத்தார். அவருடைய திருமுகத்தில் சிரிப்பை நான் பார்த்ததே இல்லை. அன்று பார்த்து அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். அவர் மிடுக்காக, நிறுத்தி, நிறுத்தித் தெள்ளத் தெளிவாகப் ''**பையப் பையத் தின்றால் பனையையும் தின்னலாம்**'' என்று கூறினார். நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

அப்பாத்துரையார் வழங்கிய அரிய பழமொழிக்கு ஒரு சிறிய விளக்கம் தேவைப்பட்டது. ''**பையப் பைய**'' என்றால் ''**Slow and Slow**'' என்றுதானே ஆகும்? என்று மாணவர் ஒருவர் கேட்டார். மின்னல் போன்ற ஒரு கருத்து எனக்குப் பளிச்சிட்டது. முதலில் வருகின்ற ''**பைய**'' என்னும் சொல் ''**Slow**'' என்ற பொருளை ஏற்பினும் இரண்டாவது வருகின்ற ''**பைய**'' என்னும் சொல்லுக்கு ''**Steady**'' என்ற பொருள் ஏற்படும். இந்தப் பொருளை எளிதில் உணர முடியாது. ''**பையப் பையத் தின்றால் பனையையும் தின்னலாம்**'' என்னும் பழமொழியை நிறுத்தி, நிறுத்திச் சொல்லிப் பார்த்தால் ''**Slow and Steady**'' என்பது தெற்றென விளங்கும். இதனை மாணவ மணிகள் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டனர். தமிழில் இருக்கிறது. தமிழ் அறிவோம்.

இணைந்த இல்லம்

புதிய குடியிருப்புகளில் வீடுகள் விறுவிறுவென்று தோன்றுகின்றன. **House** என்றால் வீடு என்பது தெரியும். **Home** என்னும் பெயரும் இருக்கின்றதல்லவா ? இதனை ''இல்லம்'' என்று குறிக்கின்றோம். **Home, Sweet Home** என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். தமிழில் ''**இல்லம், இனிய இல்லம்**'' என்று நாம் சொல்லி மகிழலாம். கட்டடத்தை மட்டும் குறிக்கும்போது **House** என்றும், கட்டடத்தில் குடியிருக்கும் குடும்பத்தையும் சேர்த்துக் குறிக்கும்போது **Home** என்றும் விளங்கிக் கொள்கின்றோம்.

புதிய குடியிருப்புகள் என்று எண்ணும்போது **Plot, Flat** என்னும் இரண்டு ஆங்கிலச் சொற்களும் முக்கிய இடம் பெறுகின்றன. **Plot** என்பது மனை அல்லது மனைக்கட்டு ஆகும். மனைக்கட்டின் அளவைக் குறிக்கும்போது ஒரு **Ground**, இரண்டு **Ground** என்று பேசுகின்றோம். ஈண்டு **Ground** என்பதற்கு மனை என்பது மிகவும் பொருத்தமாக உள்ளது. ஆகையால், ஒரு மனை, இரண்டு மனை என்றுபேசும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ்வாறாயின் **Plot** என்பதற்கு ''**மனைக்கட்டு**'' என்பதே பொருத்தம் என்று தெளிவாகிவிடுகின்றது.

எனினும் Flat என்னும் சொல் வரும்போது சிறிது சிக்கல் ஏற்படுகின்றது. இப்போது எங்கு பார்த்தாலும் '' **அடுக்கு மாடிக் கட்டடங்கள்**'' காட்சி தருகின்றன. இவற்றை ஒரு தொகுப்பாக **Flats** என்று கூறுகின்றோம். எடுத்துக்காட்டாக **M.I.G.Flats** நடுத்தர வருமான வகுப்பினர் அடுக்குமாடிக் கட்டடங்கள். அவ்வாறாயின் தனித்தனி **Flats**-ற்கு என்ன பெயர் என்னும் வினா எழுகின்றது. தொடர்புடைய துறையில் பணியாற்றும் நண்பர் ஒருவரைக் கேட்டேன். அவர் தனி **Flat**- ஐக் குடியிருப்பு என்றுதான் சொல்வோம் என்று விடை கூறினார். இது சரியில்லை. ஏனென்றால் குடியிருப்பு என்பது பலவிடங்களில் பயன்படும் பொதுவான சொல்லாகும். **Flat** என்றால் இணைந்த வீடு அல்லது இணைந்த இல்லம் என்பது பொருத்தந்தானே.

*

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

கைச்சிட்டை

நிதி வசதியுடையவர்களும், நிதி வசதி குறைந்தவர்களும், யாவருமே வங்கிகளில் கணக்கு வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். வங்கிகளில் பணத்தைச் செலுத்தினால் அந்தப் பணம் பாதுகாப்பாக இருக்கிறது; கணக்கு வைத்திருப்பது ஒரு வசதியாகவும் இருக்கிறது; ஒரு பெருமையாகவும் இருக்கிறது. நவீன காலத்தில் வங்கிக் கணக்கு இல்லாதவர்களே இல்லை என்று கூடக் கூறிவிடலாம்.

வங்கியில் நாம் கணக்குத் தொடங்கியவுடன் நமக்கு ஒரு **Pass book** கொடுக்கின்றார்கள். கொடுக்கல், வாங்கல் குறிக்கப் பெற்ற இந்தக் கணக்குப் புத்தகத்தின் மூலம், குறிப்பிட்ட நேரத்தில் வங்கியில், நமக்கு எவ்வளவு தொகை இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். **Pass book** என்னும் இந்தப் புத்தகத்தை நாம் அடிக்கடி எடுத்துச் செல்வோம்; எடுத்து வருவோம். ஆயினும் அந்தப் புத்தகத்துக்கு உரிய தமிழ்ப்பெயர் என்ன என்று சிந்திப்பதே இல்லை.

அகராதிகள் விளக்கங்களைக் கொடுக்கின்றன. ஆயினும் அழகிய பெயர் ஒன்றை அவை தரவில்லை. **Pass book** என்பதற்குச் சரியான சொல்லாக்கத்தைத் தெரிந்து கொள்ள நீண்டகாலம் பிடித்தது என்றுதான் சொல்லுதல் வேண்டும். ''**பற்று வரவுச் சிட்டை**'' என்பது ஒரு மொழிபெயர்ப்பு.

“**பற்று வரவுக் கைச்சாத்து**” என்பது இன்னொரு மொழிபெயர்ப்பு. இவை சுருக்கமாகவும் இனிமையாகவும் அமையவில்லை. எனவே மனநிறைவு ஏற்படவில்லை. பின்னர் நான் சைவ சித்தாந்தக் கழக ஆட்சியாளர், ‘தாமரைச் செல்வர்’ வ.சுப்பையா பிள்ளை அவர்களோடு கலந்து பேசினேன். **Pass book** என்பதற்குத் தமிழ் என்ன என்று கேட்டேன். புன்னகை புரிந்தார் அவர். ‘‘நாட்டுப்புறங்களில் இது பழக்கத்தில் இருக்கிறதே’’ என்று சொல்லி, **Pass book** என்றால் “கைச்சிட்டை தானே’’ என்று கூறி முடித்தார். நான் மெய் மறந்து போனேன். கையிலே எடுத்துச் செல்லும் விவரங்களடங்கிய அழகிய சிறிய கணக்குப் புத்தகம் கைச்சிட்டைதானே. நீயோர் பேரேடு, நானோர் கைச்சிட்டை என்று இன்னோர் அறிஞர் எழுதியிருந்தது அப்போதுதான் நினைவுக்கு ஓடி வந்தது.

Pass book = கைச்சிட்டை

❄

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

ஓமல்

வதந்திகளைப் பரப்புவதில் பலர் வல்லவர்களாக இருப்பார்கள். நடவாத ஒரு செய்தியை நடந்ததாகக் கூறுவதும், நடந்த ஒரு செயலை மிகைப்படுத்திக் கூறுவதும் வதந்தியின் கூறுகளாகும். வதந்திகளைப் பரப்பினால் பல நேரங்களில் அவை தீர்க்க முடியாத துன்பங்களாக மாறிவிடும், ''வதந்தி'' என்னும் இந்தச் சொல்லை ஆங்கிலத்தில் ''RUMOUR'' என்று கூறுவார்கள். தமிழ்க்கடல் மறைமலையடிகளாரிடம் ஒரு நாள் நேரில் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அப்போது ஐயா ''RUMOUR'' என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் என்ன? என்று கேட்டுவிட்டேன். பொதுவாக, அவரிடம் நேரில் செல்வதற்குக் கூட அஞ்சுவார்கள், அறிஞர் பெருமக்கள். நானோ இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டு ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டேன்.

''இளங்கன்று பயமறியாது'' என்பதை அவர் உணர்ந்து கொண்டார். புன்னகை புரிந்துகொண்டே ''**ஊர்ப்பேச்சு**'' என்று உரைத்தார். பெருமகிழ்ச்சி அடைந்தேன். இதனை மேலும் சுருக்கி மெருகேற்ற முடியுமா என்று ஆராய்ந்து கொண்டே இருந்தேன். ''அம்பல்'' ''அலர்'' என்னும் சொற்கள் துணை புரியமாட்டாவா என்று எண்ணமிடலானேன். காதற் செய்தி சிறிதளவு வெளிப்பட்டுள்ள நிலையை ''**அம்பல்**'' என்கிறோம். பெரியதாகப் பரவிவிட்ட நிலையை ''**அலர்**'' என்று கூறுகின்றோம்.

ஒரு நாள் புத்தகக் கண்காட்சி ஒன்றைக் கண்டுகளிக்க நண்பருடன் சென்றிருந்தேன். அங்கு ஒரு கடையில் ஓர் அகராதியைப் பார்த்தேன். என் கண்ணைக் கவர்ந்த அந்த அகராதியை மெல்லப் புரட்டிப் பார்த்தபோது ''ஓமல்'' என்னும் ஒரு சொல் என் கண்ணில் பட்டது. அதற்குப் பொருளாக ஆங்கிலத்தில் ''RUMOUR''என்னும் சொல் கொடுக்கப் பட்டிருந்தது. அதன் பிறகு பல்கலைக் கழகப் பேரகராதியைப் புரட்டிப் பார்த்தபோது ''**ஓமல் Compare அம்பல்**'' என்று கொடுத்திருந்தார்கள். ''**அம்பல்**'' என்னும் சொல் ஓமலாக மாறியிருக்கலாம்.

RUMOUR = ஓமல்

❖

மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

அவையல் கிளவி

Parliament என்னும் பெயரைப் பாராளுமன்றம் என்று நாம் முன்னர் வழங்கிவந்தோம். இப்போது அதனை நாடாளுமன்றம் என்று வழங்கிவருகின்றோம். மாநிலங்களின் சட்டசபைகளைச் ''**சட்டப்பேரவை**'' என்று வழங்கி வருகின்றோம். இந்த மன்றங்களில் பேசப்படும் செய்திகள் வழக்கமான நடைமுறைகளுக்கு ஏற்ப, நல்ல முறையில் அமைதல் வேண்டும். வரம்பு மீறிய சொற்களை **Unparliamentary Words** என்று சொல்வது வழக்கம். இதனைத் தமிழில் சொல்லும்போது ''**மன்ற மரபுக்கு ஒவ்வாத சொற்கள்**'' என்று பயன்படுத்தி வருகின்றோம். இந்த மொழிபெயர்ப்பு சரியான கருத்து விளக்கமாகவே இருக்கிறது. எனினும் இதனைச் சுருக்கிச் சொல்ல முடியாதா என்பது ஆய்வுக்கு உரியதாகும். ''**அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்**'' என்னும் தொல்காப்பிய நூற்பாவை நோக்குவோம். இதன் பொருள் ''நன்மக்களுடன் கூறப்படாத சொல்லைக் கிடந்தவாறே சொல்லற்க; பிறிது வாய்பாட்டான் மறைத்துச் சொல்லுக'' என்பதாகும்.

''**இடக்கரடக்கல்**'' என்னும் இலக்கணத்தை விளக்குவதே இந்நூற்பாவாகும். ஆயினும் இன்று இது புதுமைக்குப் புதுமையாய்ப் பொலிந்து தோன்றுகிறதன்றோ? நல்லார் அவையின்கண்ணே சொல்லுதல் கூடாத சொற்கள்தாமே ''**அவையல் கிளவிகள்**''! **Unparliamentary Words** என்பதற்கு இதைவிட விளக்கம் வேறு வேண்டுமோ?

Unparliamentary Words = **அவையல் கிளவி**

கட்டளைச் சொற்கள்

தமிழ் மொழி மென்மையான மொழி. ஆகையால் வன்மை தோன்ற ஒலிக்க வேண்டிய கட்டளைச் சொற்களை (Command Words) தமிழில் அமைத்தல் முடியாது என்று பலரும் பேசுவதை நான் அவ்வப்போது கேட்டுள்ளேன். ஏன் முடியாது என்னும் வினா எழுந்துகொண்டே இருக்கும். இந்தப் பொருள் குறித்துக் காவல் துறையைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் ஏற்கெனவே சிந்தித்து, நன்கு ஆராய்ந்து, அருமையான தமிழ்ச் சொற்களை உருவாக்கியுள்ளார். இதனை, மதுரை மாநகரில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் நான் கண்டுகளித்தேன். அவருடைய திருப்பெயர் திரு.ச.இராசவேலு என்பதாகும். இவர் ஆட்சிமொழி குறித்த கருத்தரங்கில் உரையாற்றி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். அவர் ஆக்கியுள்ள சொல்லாக்கங்கள் அருமையானவை. அவற்றுள் சிலவற்றை நினைவுகூர விழைகின்றேன்.

ATTENTION	=	நிமிர்ந்து நில்
STAND-AT-EASE	=	தளர்ந்து நில்
STAND EASY	=	ஓய்ந்து நில்
FALL - IN	=	அகம் சேர்
FALL-OUT	=	புறம் போ
EYES - RIGHT	=	வலம் பார்
EYES-LEFT	=	இடம் பார்

LEFT RIGHT, LEFT RIGHT என்னும் சொற்களுக்குப் பதிலாக இடம் வலம், இடம் வலம் என்னும் சொற்கள் வானில் இடிமுடிக்கம் செய்தன. இவை எத்துணை இனிமையாகவும், எளிமையாகவும் அமைந்துள்ளன! ஆங்கிலச் சொற்களின் ஒலிகளைப் போலவே, அவர் புதிய தமிழ்ச் சொற்களையும் ஒலித்துக் காட்டியபோது, மாநாட்டுப் பேராளர்களின் உள்ளங்கள் மகிழ்ச்சியில் திளைத்தன. இஃதன்றோ தமிழ் வளர்ச்சி என்று எல்லாரும் வியந்து பாராட்டினர்.

அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

ஏற்பிசைவு

பழக்கத்தின் வலிவினால் பல்வேறு ஆங்கிலச் சொற்களை நாம் இறுகப் பற்றிக் கொண்டுள்ளோம். **Commitment** என்னும் ஆங்கிலச் சொல் அலுவலகங்களில் முதன்மையானதோர் இடத்தைப் பிடித்துக் கொள்கின்றது. **This should not be taken as a Commitment** என்று பேசுவார்கள், எழுதுவார்கள். ''**ஒப்புதல் தெரிவித்துவிட்டதாக எடுத்துக் கொள்ளுதல் கூடாது**'' என்று இதனை மொழி பெயர்க்கலாம். **Acceptance** என்னும் சொல்லுக்கு ''**ஒப்புதல்**'' என்பது நன்கு பொருந்துகிறது. ஆயினும் **Commitment** என்னும் சொல்லுக்கு ''**இசைவு**'' என்னும் சொல்லும் இணைதல் வேண்டும். அப்பொழுதுதான் அச்சொல்லுக்கு முழுமையான பொருள் விளக்கம் ஏற்பட முடியும்.

அகராதிகள் துணைபுரியக் காணோம். ஒவ்வொரு கோணத்திலிருந்து, அவை, ஒவ்வொரு பொருளைத் தருகின்றன. முழுவடிவத்தைக் காட்டவில்லை. ஏற்பு, இசைவு என்னும் அழகிய சொற்களை இணைத்து அவற்றை ஒரு கூட்டுச் சொல்லாக ஆக்கிப்பார்ப்போமே! ''**ஏற்பிசைவு**'' என்னும் இனிய சொல் பிறக்கின்றதன்றோ ?

அதுதான் **Commitment. This should not be taken as a commitment** என்னும் வாக்கியத்தை இப்போது பார்ப்போம். இதனை ஏற்பிசைவாகக் கொள்ளலாகாது என வரைந்த பிறகு, வண்டமிழின் அழகைக் கண்டுகளிக்கின்றோம். அழகில் விஞ்சி நிற்பது ஆங்கிலமா, தமிழா ? என்று வினாவின் இரண்டுமே சமமாகச் சரி ஒப்பாக இனிக்கின்றன என்று தெரிந்துகொள்ளலாம்.

திட்டப் பெயர்கள்

திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம் என்று பேசுகின்றோம். குடும்பத்தைத் திட்டமிடுவது போலவே குடும்ப வரவு செலவுகளையும் திட்டமிடுதல் வேண்டும். அரசுக்கு வருமானம் அதிகமாக உள்ளது. அதனைக் கொண்டு அரசு பெரிய திட்டங்களைத் தீட்டுகின்றது. குடும்ப வருமானமோ குறைவு. அதற்கேற்பச் சிறிய அளவில் குடும்பத்திற்கான திட்டம் தீட்டுதல் வேண்டும். இந்தத் ''**திட்டம்**'' என்னும் சொல் ஓர் அருமையான சொல்லாகும். ஆங்கிலத்தில் **Scheme** என்றும், **Plan** என்றும், **Project** என்றும், **Programme** என்றும் நான்கு சொற்கள் இருக்கின்றன. இவை அனைத்துக்கும் நாம் ''**திட்டம்**'' என்னும் ஒரேவொரு சொல்லைத்தானே வழங்கி வருகின்றோம் என்று ஒரு சிலர் குறை கூறுவதுண்டு. அவர்கள் தமிழை நன்கு பயிலாதவர்கள் என்றுதானே கூறுதல் வேண்டும். ''**தமிழ் அறிவோம்**'' என்று அவர்கள் முன்வருதல் வேண்டும். அரசுக்குப் பலதுறைகள் இருக்கின்றன. அவ்வத்துறையில் உள்ள வல்லுநர்கள் நன்கு ஆராய்ந்து, உருவாக்கி அல்லது சமைத்து திட்டங்களை அரசின் ஆய்வுக்கு அனுப்புகின்றனர். ஆகவே **Scheme** என்பது ''**சமை திட்டம்**'' ஆகும். இவ்வாறு உருவாக்கப் பெற்ற திட்டங்கள் அனைத்தும் ஒன்றாகச் சேர்க்கப் பெற்று அவை ஒரு தொகுப்பாக **Five Year Plan** என்னும் முறையில் அமைகின்றன. எனவே **Plan** என்பது ''அமைதிட்டம்'' ஆகும். பின்னர், தொடர்ந்து செயற்பட்டுவரும் ஒரு திட்டத்தை **Project** என்று கூறுவார்கள். எடுத்துக்காட்டாக **Nevveli Lignite Project** என்று கூறலாம். எனவே **Project** என்பதை "ஆகு திட்டம்" என்று அறிவிக்கலாம். கடைசியாக **Programme** என்னும் சொல்லைப் பார்ப்போம். இது ஒவ்வோர் ஆண்டிலும் செயற்படுத்தப்படுகின்ற திட்டமாகும். எனவே **Programme** என்றால் செயல் திட்டம் அல்லது செய்திட்டம் என்று அமைந்துவிடும். இப்போது அனைத்துச் சொற்களையும் அழகு தமிழில் அமைத்துவிட்டோம்.

Scheme	=	**சமை திட்டம்**
Plan	=	**அமை திட்டம்**
Project	=	**ஆகு திட்டம்**
Programme	=	**செய் திட்டம்**

திருவளர் செல்வன்

திருமண அழைப்புகள் மிகவும் இனிமையான அறிவிப்புகளாகும். நல்ல தமிழில் அவை அமைந்திருந்தால், நாம் அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறோம். இனிமையான மொழியின் இனிமையான சொற்களை எடுத்தாளும்போது நாம் நம்மையே வியந்து பாராட்டிக் கொள்கின்றோம். திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்று ஆன்றோர்கள் கூறுவர். அத்தகைய விழாவைப் பற்றிய செய்திகள் அழகு தமிழில் அமைய வேண்டாவா? இனிய தமிழில் இருக்க வேண்டாவா?

இன்னாருடைய மகன், இன்னாருடைய பெயரன் என்பது சரிவரத் தெரிதல் வேண்டும். பெயரன், பெயர்த்தி என்னும் சொற்களைக் கூடச் சரிவர வழங்குவதில்லை. மணமக்களின் பெயர்களுக்கு முன்பாகத் திருவளர் செல்வன், திருவளர் செல்வி என்னும் அடைமொழிகளை அமைப்பதுண்டு. சிலர், திருவளர்ச்செல்வன், திருவளர்ச்செல்வி என்று எழுதிவிடுகின்றார்கள். இப்படி எழுதுவதில் தவறு இல்லை, என்றபோதிலும், திருவளர்செல்வன், திருவளர்செல்வி என்று எழுதுவதிலேதான் எல்லாச் சிறப்புகளும் அடங்கி இருக்கின்றன. இவை வினைத்தொகையாக முக்காலங்களையும் குறிக்கும். எல்லாக் காலங்களிலும் இனிது வாழவேண்டிய மணமக்களை இவ்வாறு வாழ்த்துவதுதானே சாலப் பொருத்தமாகும்.

இன்னொரு செய்தியையும் ஈண்டுக் குறிப்பிடலாம். வருகை புரிந்து வாழ்த்தியருளுமாறு கோறுகிறேன், என்று சிலர் வல்லினத்தைப் பெய்து அழைப்பினை நிறைவு செய்கின்றார்கள். இந்த வாக்கியத்தில் வருகின்ற வல்லினம் எவ்வாறு பொருளை அடியோடு மாற்றி விடுகின்றதென்பதை உணர்வதில்லை. ''**கோருகின்றேன்**'' என்று இடையினத்தைப் பெய்து, எழுதி இன்பத்தைப் பெருக்கலாமே.

பட்டிகைப் படிப்பு

படிப்பு வகையில் Diploma Course என்றும் Degree Course என்றும் இருக்கின்றன. Diploma படிப்பு சுருக்கமானதாகவும் Degree படிப்பு விரிவானதாகவும் இருப்பதை நாம் அறிவோம். நான் ''மொரீசியசு'' நாட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கிருந்த மாணவர்கள் தமிழ் இலக்கியப் படிப்பு படித்து வருவதைப் பார்த்தேன். Diploma என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்துமாறு ஆசிரியப் பெருமக்களைக் கேட்டுக் கொண்டேன். அதன் பின்னர் அவர்களுக்கு விளக்கம் கூறினேன்.

Degree Course என்று இருந்தால் அதனைப் ''**பட்டப்படிப்பு**'' என்று குறிப்பிடுவது சரியான முறையேயாகும். Diploma என்பதற்கு இப்போது தமிழ் நாட்டில் ''**பட்டயம்**'' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனை நீங்களும் பயன்படுத்தலாம் என்று கூறி முடித்தேன்.

எனினும் ஆய்வுக் கருத்து ஒன்றினை அவர்களிடம் எடுத்துக் கூறுவது சரியாக இருக்காது என்று விட்டுவிட்டேன். பட்டயம் என்னும் சொல் வேறொரு ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. Charter என்றால் பட்டயம். Chartered Accountant என்று வரும்பொழுது ''**பட்டயக் கணக்காளர்**'' என்று குறிப்பிடுகின்றோம். எனவே Diploma என்பதற்குப் பட்டயம் என்பது பொருத்தமானதாக இல்லை. வேறொரு நல்ல தமிழ்ச்சொல் உதவி செய்யக் காத்திருக்கிறது.

''**பட்டிகை**'' என்னும் சொல்லைத்தான் நான் நினைத்துப் பார்க்கின்றேன். இந்தச் சொல்லுக்கு Royal Grant (or) Deed "இராசபத்திரம்" என்னும் பொருள் இருக்கிறது. இப்போது தெளிவாக விளங்குகின்றதல்லவா ? Diploma என்பதற்குப் ''**பட்டிகை**'' என்னும் சொல்லே சாலப் பொருந்துகின்றது என்று சொல்லவும் வேண்டுமோ ?

Diploma = **பட்டிகைப் படிப்பு**

அகர முதல் னகர இறுவாய்

தமிழ் இலக்கணம் தானாகத் தோன்றிய இலக்கணம். இயல்பாக வளர்ந்த இலக்கணம். உயிரென்றும், மெய்யென்றும், உயிர்மெய்யென்றும் எழுத்துகள் பிரிக்கப்பட்டுள்ள இலக்கணம். உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. இஃது இலக்கணமா அல்லது உலகியற்கையா என்று எண்ணிப் பார்க்கும் அளவுக்கு இலக்கணம் அத்துணை எளிமையாகத் தோன்றுகிறது. இலக்கியத்திலிருந்து தோன்றியுள்ள இலக்கணத்தில் நமக்கு இன்றைய நிலையில் தேவைப்படும் எண்ணற்ற சொற்கள் எளிதில் கிடைக்கின்றன. ஆங்கிலச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச் சொற்கள் நம் அருகிலேயே கிடைக்கின்றன.

Penultimate என்னும் சொல்லை எடுத்துக் கொண்டால், ''**கடைசிக்கு முந்திய**'' என்று விளக்குகிறோம். ஆனால் இலக்கணமோ ''**ஈற்றயல்**'' என்னும் இனிய சொல்லை வெற்றிக் களிப்புடன் விளம்புகின்றது. இதேபோல் Exception என்ற சொல்லுக்கு ஈடாக ''**விலக்களிப்பு**'' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறோம். ஆனால் இலக்கணமோ ''**புறனடை**'' என்னும் பொலிவுமிக்க சொல்லை நமக்குப் புரியவைக்கின்றது. ஆங்கிலத்தில் AtoZ என்று சொல்லுகின்ற பழக்கம் இருந்துவருகின்றது. இதனைத் தமிழில் எவ்வாறு கூறுவது என்பதற்குத் தொல்காப்பியம் விடை கூறுகின்றது.

எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே'' என்று எடுத்த எடுப்பிலேயே தொல்காப்பியம் மிடுக்குடன் பேசுகின்றது.

''**அகரமுதல் னகர இறுவாய்**'' என்பதுதானே A to Z. நம் மொழியின் வளத்தை மொழியவும் வேண்டுமோ ?

கோவையாகப் பேசினார்

வளமான மொழியே தமிழ் மொழி என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அழகான மொழியாகவும் இனிமையான மொழியாகவும் அது திகழ்கின்றது. நாம் நம்முடைய தமிழ் மொழியைப் பலவாறாகப் போற்றி மகிழ்கின்றோம். அவ்வாறாயின் அத்தகைய சிறந்த மொழியில் பிழைகள் வந்து புகுந்துகொள்ள இடந்தரலாகாதன்றோ? அன்றாட வாழ்க்கையில் எள்ளிலிருந்து எடுக்கப் பெற்ற எள் நெய்யை ''**எண்ணெய்**'' என்று எழுதாமல் ''**எண்ணை**'' என்று எழுதுகின்றோம். தேயிலையிலிருந்து கிடைக்கும் நீரைத் ''**தேநீர்**'' என்று எழுதாமல் றன்னகரத்தை அமைத்துத் ''**தேனீர்**'' என்று எழுதிவிடுகின்றோம். அவ்வாறு எழுதிவிட்டால் ''**தேன் நீர்**'' என்று அது ஆகிவிடுமல்லவா?

இதே போன்று ''**கோர்வையாகப் பேசினார்**'' என்று பாராட்டுரை பகர்கின்றோம். ''**கோவையாகப் பேசினார்**'' என்பதுதான் சரியான முறையாகும்.

தமிழுக்குச் சேவை செய்யும் கோவை நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆசாரக் கோவை அன்றாட வாழ்க்கையை அழகுறப் படம் பிடிக்கின்றது. அவ்வாறாயின், அன்றாட வாழ்வில் நாம் பிழைகளைத் தவிர்க்க வேண்டாவா?

உந்தன், எந்தன் என்று பேசுவதையும் பார்க்கின்றோம். உன்றன், என்றன் என்று கூறினால் ஓசையின்பம் ஓங்கி நிற்பதைக் காணலாம். தன்னலம், தந்நலம் என்னும் சொற்களும் தவறான இடங்களில் பயன்படுத்தப் பெறுகின்றன. தமிழ் நலமே நாம் காக்க வேண்டிய தனிநலம் என்பதை யாவரும் உணர்தல் வேண்டும்.

பணிநிறைவுப் பாராட்டுவிழா

ஓர் அலுவலகத்திலே சேர்ந்து, அங்கு பல்லாண்டுகள் பணியாற்றிவிட்டு ஒருவர் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அந்த அலுவலகத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுகூடி அவரைப் பாராட்டுவதற்கு ஒரு விழா ஏற்பாடு செய்கின்றார்கள். இதற்கு ஆங்கிலத்தில் **Farewell Party** என்று பெயர். இதற்கு இப்பொழுதுள்ள தமிழ்ப் பெயர் ''**வழியனுப்பு விழா**'' என்பதாகும்.

அவர் பல்லாண்டுகள் பணி செய்துள்ளார். கடமையுணர்வோடு சீரும் சிறப்புமாகப் பணி புரிந்துள்ளார். அத்தகைய ஒருவரை வழியனுப்புதல், வீட்டுக்கனுப்புதல் என்னும் பெயரால் குறிப்பிடுவது சரிதானா ? இல்லை. அவரைப் பாராட்ட வேண்டும், அவர்போல் மற்றவர்களும் பணியாற்றுதல் வேண்டும் என்ற உணர்வினைத் தோற்றுவித்தல் வேண்டும். அவ்வாறாயின் இந்த விழாவுக்கு வேறு நல்ல பெயர் சூட்டுதல் வேண்டும்.

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு''

என்று பேசுகிறார் பெருநாவலர். ஊதியம் பெற்றுப் பணிபுரிந்தாலும், பிறர்நலம் பேணிய பெரியோரைப் பாராட்டுவதே முறையாகும். அந்த முறையில் அவருடைய பணியைப் பாராட்டி மகிழ விழாவெடுக்கின்றோம். ஓய்வு பெறுபவர் உண்மையில் ஓய்வு பெற்றவராகார். புதுவாழ்வைத் தொடங்குகிறார் என்பதுதான் சரியான பொருள். இரண்டாம் இளமை பெறுகிறார் என்பதும் வியத்தகு உண்மையாகும். அவ்வாறாயின் உரிய செந்தமிழ்ப் பெயரை இப்போது உரைக்கலாமல்லவா ? அதுவே **பணிநிறைவுப் பாராட்டு விழா !**

சட்ட வகைகள்

இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்ற போது, பேராளர் ஒருவர் Scheme, Plan, Project, Programme என்னும் நான்கு சொற்களுக்கும் ''**திட்டம்**'' என்னும் ஒரேவொரு சொல்தான் தமிழில் இருக்கிறது என்று தெரிவித்தார். இதற்குரிய விடையை நாம் ஏற்கெனவே தெரிவித்துவிட்டோம்.

இப்போது இதைப்போன்ற இன்னொரு செய்தி பேசப்பட்டு வருகின்றது. Act, Bill, Code, Enactment, Law, Legislation என்னும் அனைத்துச் சொற்களுக்கும் ''**சட்டம்**'' என்னும் ஒரேவொரு சொல்தானே தமிழில் இருக்கிறது என்னும் கேள்வி பிறந்துள்ளது. எந்தக் கருத்தையும் எடுத்துச் சொல்ல, தமிழில் ஏராளமான சொற்கள் இருக்கின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஏதேனும் ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொல் உடனே ஓடிவராவிட்டால், நீதியரசர் மகராசன் சொல்லுவார், ''தமிழில் இருக்கிறது, கண்டுபிடியுங்கள்'' என்று கட்டளையிடுவார். உடனே நாங்கள் பெருமுயற்சி செய்து கண்டுபிடித்துவிடுவோம்!

Act என்னும் சொல் எல்லாச் சூழ்நிலைக்கும் ஏற்ற பொதுவான சொல்லாகும். எனவே அதற்குரிய மொழிபெயர்ப்பு ''**சட்டம்**'' என்பதேயாகும். நறுக்குத் தெறித்தாற்போன்று, நான்கு எல்லைக்கு உட்பட்டது சட்டம்.

Bill என்பதை ''மசோதா'' என்று கூறி வந்தோம். இப்பொழுது ''சட்ட முன்வடிவு'' என்று கூறி வருகின்றோம். இதனைச் சற்றுச் சுருக்கி ''**வடிவுச் சட்டம்**'' என்று வகைப்படுத்தலாமல்லவா? சட்டங்களின் தொகுப்பினை Code என்று கூறுகின்றோம். எனவே இது ''**தொகுப்புச் சட்ட**'' மாகிறது.

அடுத்ததாக Enactment என்பது, ஒரு வடிவுச்சட்டம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படுவதாகும். எனவே இதனை ''**இயற்றுச் சட்டம்**'' என்று கூறலாம். Law என்று சொல்லுபோது Law of the Land என்று சொல்லுவது வழக்கம். எனவே இது ''**நாட்டுச் சட்டமாகிறது**''.

கடைசியாக ''Legislation''. ''சட்டம் கொண்டு வருவோம், சட்டமியற்றுவோம்'' என்னும் நிலையைக் குறிப்பதாகும். எனவே இது ''**செய் சட்டமாகும்**''.

இப்போது வரிசைப்படுத்தி மகிழ்ச்சியடைவோம்.

Act	=	**சட்டம்**
Bill	=	**வடிவுச் சட்டம்**
Code	=	**தொகுப்புச் சட்டம்**
Enactment	=	**இயற்றுச் சட்டம்**
Law	=	**நாட்டுச்சட்டம்**
Legislation	=	**செய் சட்டம்**

Common Law என்று வந்தால், அது எழுதாச் சட்டம் என்றாகும். இவை அனைத்தையும் எண்ணி எண்ணி இன்புறுவோம்.

சுழியம்

''**சுழி**'' என்னும் சொல் ஒரு சுவையான சொல்லாகும். இச்சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. அவற்றுள் Zero என்னும் பொருள் மிகவும் முக்கியமானதாகும். ''இவருக்கு என்ன சுழி போடப்பட்டுள்ளதோ'' என்று பேசும்போது ''**விதி**'' என்னும் பொருள் ஏற்படுகின்றது.

மாடுகளை விலைக்கு வாங்கும்போது, முதுகில் உள்ள சுழியைப் பார்த்து, இது நல்ல சுழிதானா என்பதை ஆராய்வார்கள். ''**ஆசிரியர் சுழித்துவிட்டார்**'' என்று பேசும்போது, Zero மதிப்பெண் கொடுத்துள்ளார் என்பதைப் புரிந்துகொள்ளுகின்றோம். தொலைபேசி எண்களையும் அஞ்சல் குறியீட்டு எண்களையும் கவனித்தால் அவற்றில் Zero நிறைய வருவதைப் பார்க்கிறோம். CiPher என்ற சொல்லும் Zero என்ற சொல்லும் ஒரே பொருளைத் தருகின்றன. அறிவில் குறைந்தவர்களை என்று கூறும் வழக்கமும் இருந்து வருகின்றது. Zero அகராதியைப் புரட்டிப் பார்த்தால், Zero என்னும் சொல்லுக்கு ஏராளமான பொருள்கள் இருக்கின்றன.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சொல்லுக்கு ஓர் அழகான தமிழ்ப் பெயரைச் சூட்டுவது தேவையென்று தெளிவாக அறியலாம். ''**சுழி**'' என்பது ஒரு நல்ல, அழகிய, பொருத்தமான சொல்லாக இருந்தாலும் அதனை மேலும் இனிமையாக்கிச் ''**சுழியம்**'' என்று கூறலாமே!

ZERO = **சுழியம்**

மெய்ப்பு

ஒரு நாள் ஆட்சி மொழி வகுப்பில் Tribute, Encomium என்னும் இரண்டு சொற்களுக்கும் விளக்கம் கொடுத்தேன். Tribute என்பதைப் ''**புகழ் மாலை**'' என்றும் Encomium என்பதைப் ''**புகழாரம்**'' என்றும் வெற்றிகரமாக விளக்கிக் கூறினேன். ஒருவர் எழுந்து நின்று, ''ஐயா Eulogy என்றால் என்ன ?'' என்று கேட்டார். இதற்கும் தமிழில் ஒரு நல்ல சொல் இருக்கிறது. அடுத்த வகுப்பில் கூறுவேன் என்று தப்பித்துக் கொண்டேன்.

சிந்தனை சுழலத் தொடங்கியது. ஒரு நாள், கிராமப்புறங்களில் புழங்குகின்ற ''**மெய்ப்பு**'' என்னும் சொல் திடீரென்று மனத்தில் தோன்றியது. தமிழ்ப் பேரகராதியைப் புரட்டிப் பார்த்தால் என்னே வியப்பு! மெய்ப்பு= Eulogy என்று கண்டிருந்தது. புகழுரை என்பதற்கு ''**மெய்ப்பு**'' என்னும் சொல் வளமான தமிழில் என்றைக்கோ ஏற்பட்டுவிட்டது. ஆம், தமிழிலே புதையல்கள் கிடைக்கின்றன.

பொன், வெள்ளி முதலான உலோகங்கள் மட்டுமல்ல, வைரக்கற்களே கிடைக்கின்றன. அதன் பின்னர் ''**இராமப்பையன் அம்மானை**'' என்னும் நூலைக் கண்ணுற நேர்ந்தது. அதில் வந்த இரண்டு வரிகள் என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்தின.

''ஆண்டவனே இப்போ அடியேன் சொல் விண்ணப்பம் கேள்!
பகைவர் படையை மெய்ப்பாகச் சொன்னீரே!''

இந்த வரிகளைப் படித்தவுடன் ''**மெய்ப்பு**'' மெருகேறியது. தமிழில் இருக்கிறது, தமிழைப் படிப்போம் என்னும் எண்ணம் வலுப்பெற்றது.

❖

ஏமம்

இலக்கிய, இலக்கண நூல்கள் சொல்லாக்கப் பணிகளுக்கு அருந்துணைகளாய் அமைகின்றன. சட்ட மொழிபெயர்ப்புகளுக்கும் பெருந்துணை புரிகின்றன. தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் மக்கள் வாழ்க்கையின் மாசற்ற சட்ட நூலாகத் திகழ்கின்றது. தொல்காப்பியத்திலும் பொருளதிகாரம் போற்றுதற்குரிய வாழ்க்கைச் சட்டமாக வழிகாட்டுகின்றது.

இப்போது Immunity என்னும் ஒரு சட்டச் சொல்லை எடுத்துக்கொள்ளுவோம். இதற்கு இரண்டு முக்கியமான பொருள்கள் இருக்கின்றன. ''**சட்ட விலக்களிப்பு**'' என்பது ஒன்று ''**நோய்த் தடைக் காப்பு**'' என்பது இன்னொன்று. இரண்டு பொருள்களுமே ''**பாதுகாப்பு**'' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். தீங்குநேராநிலைக்காப்பே ''Immunity'' என்று கூறலாம். மிக முக்கியமான தொல்காப்பிய நூற்பா ஒன்றை இப்போது நினைவு கூர்வோம்:

''காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

இல்லற வாழ்க்கையை இனிது முடித்துவிட்ட நிறைவு நேரத்தில், தலைவனும் தலைவியும் பாதுகாப்பைத் தருகின்ற தம் மக்களோடு நெருங்கியிருத்தல் வேண்டும். அத்துடன் அறவாழ்க்கையை வாழ்கின்ற சுற்றத்தாரோடும் சேர்ந்து வாழ்ந்து, சிறந்த பொதுத்தொண்டுகளைப் புரிதல், கடந்த கால வாழ்க்கையின் பயனாக அமையும். ‘‘**ஏமஞ் சான்ற மக்கள்**’’ என்னும் தொடர் இனிக்கும் தொடராக மிளிர்கின்றது. அவர்களே பாதுகாப்பைத் தருகின்ற மக்களாவர். மக்கள் தரும் பாதுகாப்புக் காரணமாக, பெற்றோர்க்கு எந்தத் தீங்கும் ஏற்படாத நிலை கிடைக்கின்றது. எனவே ‘‘**ஏமம்**’’ என்பதே Immunity ஆகுமென்று இனிது பெறப்படும். இலக்கியச் சொல் சட்டச் சொல்லாக மாறி இன்பம் பயப்பதைக் கண்டுகளிக்கின்றோம்.

Immunity = ஏமம்

❖

மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

முதுவர்

Senior என்னும் சொல் அடிக்கடி பேசப்படுகின்ற ஒரு சொல்லாகும். கல்லூரியில் அவர் எனக்கு Senior என்று கூறுவார்கள். அதே போன்று அலுவலகத்திலும், பிற இடங்களிலும் Senior என்னுஞ் சொல் புழக்கத்தில் இருந்துவருகிறது. Junior Assistant, Senior Assistant என்னும் பெயர்களை ''**இளநிலை உதவியாளர்**'' என்றும், ''முதுநிலை **உதவியாளர்**'' என்றும் மொழிபெயர்க்கின்றோம். அலுவலகங்களில் பணிபுரிவோரை ''**ஓலைக் கணக்கர்**'' என்று ஓதுகின்றது நாலடியார். அன்றைய கோப்புகள் ஓலைகளாகத்தானே இருந்திருக்கும். ஓலைகளில் குறிப்பு எழுதுவோர் ''**ஓலைக் கணக்கர்**'' என்னும் பெயரினைப் பெற்றனர். இன்று நாம் எழுத்தர், இளநிலை உதவியாளர், முதுநிலை உதவியாளர் என்னும் பெயர்களை அமைத்துள்ளோம். இவற்றுக்கு நேரிணையான பெயர்தான் ஓலைக் கணக்கர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆட்சி மொழியானது Administrative Language நமக்குத் தெரிந்த மொழியாக இருந்துள்ளது. Senior என்னும் சொல் தனித்து வரும்போது அதற்குரிய தமிழ்ச் சொல் என்ன என்பதை நாம் ஆய்ந்து பார்த்தல் வேண்டும். தெய்வப் புலவர் திருவள்ளுவர் ஒரு செய்தியினைத் தெரிவிக்கின்றார்.

''நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு''

பெரியவர்கள் இருக்கின்ற அவையிலே அவர்கள் பேசுவதற்கு முன்பு சிறியவர்கள் பேச முனைதல் சிறப்பாகாது. தங்கள் கருத்துகளைப் பெரியவர்கள் தெரிவித்த பின்னரே, சிறியவர்கள் பேசத் தொடங்குதல் வேண்டும்.

இந்தக் குறளிலே வருகின்ற ''**முதுவர்**'' என்னும் சொல் இக்காலத்தில் பெருவழக்காயுள்ள Senior என்னும் சொல்லுக்கு எத்துணை இனிமையாகப் பொருந்துகின்றது. Senior –கள் இருக்கும் அவையில் Junior –கள் முந்திக்கொண்டு பேசுதல் ஆகாது.

முற்பட்டு வந்தவரே முதுவர்
பிற்பட்டு வந்தவரே இளவர்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

வரைந்து வைத்தல்

வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு வகையான வரவுகளும் அதேபோன்று பல்வேறு வகையான செலவுகளும் வகைப்படுத்தப்பட்டு இருக்கும். வரிசை வரிசையான செலவினங்களையும் நாம் காணமுடியும். எல்லாச் செலவினங்களும் முக்கியமானவைதாம். நிதி நெருக்கடி ஏற்படும் போது, எந்தச் செலவினத்தைத் தள்ளிப் போடுவது என்று முடிவு செய்வது மிக மிகக் கடினம் என்றே கூறுதல் வேண்டும். ஏனென்றால் ஏற்கெனவே தள்ளிப் போடப்பட்ட செலவினங்கள் முந்திக்கொண்டு நிற்கும். ஆகையால், திட்டமிடுபவர்கள் தெளிவான முடிவுகளை மேற்கொண்டாக வேண்டும். முன்னுரிமை தரப்பட வேண்டிய செலவினங்களை வரிசைப்படி முறைப்படுத்துதல் வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கட்டாயமாகச் செயற்படுத்தப்பட வேண்டிய செலவினம் ஒன்று அல்லது இரண்டு இருக்கும். இதற்குரிய நிதி வசதியை Earmark செய்தல் வேண்டும் என்று ஆங்கிலத்தில் எடுத்துக் கூறுவார்கள்.

Earmark என்றால் என்ன ? ‘‘**காதுக்குறி**’’ என்று ஒரு நண்பர் எழுதிவிட்டார். இதைத் தவறென்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால், இது வேறு சூழ்நிலையில் வருகின்ற மாறுபட்ட பொருளாகும். ஆனால், நம் சூழ்நிலைக்குப் பொருந்துகின்ற அகராதிப் பொருள் ‘குறிப்பிட்ட ஒதுக்கீடு’ என்பதாகும். இது ஓரளவு சரியேயாயினும் முழுப்பொருளைத் தரவில்லை. இலக்கியக் கடலில் மூழ்கித் திளைத்த மறைத்திரு மறைமலை அடிகளார் இலக்கியத்திலிருந்தே இனிய மொழிபெயர்ப்பு ஒன்றை எடுத்துக் காட்டுகிறார் ‘‘**வரைந்து வைத்தல்**’’ என்பதுதான் அந்த அரிய மொழிபெயர்ப்பு. Earmark என்பதற்கு இலக்கணம் போன்ற இந்த மொழி பெயர்ப்பை’ விஞ்சுகின்ற மொழிபெயர்ப்பு எதுவுமே இருக்கமுடியாது.

உடன் மருகர்

இவர் என்னுடைய மருமகன் என்று அறிமுகம் செய்கின்றோம். மருமகன் என்னும் சொல்லைச் சுருக்கி ''**மருகர்**'' என்று சொல்வதுமுண்டு. மருகன் என்னும் இலக்கியச் சொல் கம்பராமாயணம், திருவாசகம் போன்ற நூல்களில் பயின்று வருவதைக் காண்கின்றோம். நம் வீட்டில் நம் மகன் இருக்கின்றார். மகளுக்குத் திருமணம் ஆனவுடன் மருமகன் வருகிறார். புதிதாக ஒரு மகன் இப்போது வருகின்றார். அவரை மருமகன் என்று வழங்குகின்றோம். மருக்கொழுந்து போல் மணம் வீசுபவர்தான் மருமகன் என்று விளக்கம் கூறலாமல்லவா ? நம் வீட்டுக்கு வருகின்ற புதிய பிள்ளையை மாப்பிள்ளை – மா – பிள்ளை – பெரிய பிள்ளை என்று அழைத்து மகிழ்கின்றோம். மாண் சிறப்புக்குரிய பிள்ளை என்றும் சொல்லி மகிழலாமல்லவா ? பெற்றோர்க்கு இரண்டு அல்லது மேற்பட்ட பெண்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது இரண்டு மருமகன்கள் அல்லது மேற்பட்ட மருமகன்கள் வருகின்றனர். இந்த மருகர்கள் ஒருவர்க்கொருவர் எவ்வாறு அழைத்துக்கொள்வர் என்று பார்த்தால், ''**சட்டகர்**'' என்ற பெயரும் ''**சகலை**'' என்ற பெயரும் நம் நினைவுக்கு ஓடி வருகின்றன. ஆங்கிலத்தில் Co-brother என்று சொல்வார்கள். Colleague என்னும் சொல்லை இப்போது நினைவுகூர்வோம். ஒரே அலுவலகத்தில் நம்முடன் பணிபுரிந்து வருவோரை Colleague என்னும் ஆங்கிலச் சொல்லால் அழைத்து மகிழ்கின்றோம். இதற்குரிய மொழியாக்கம் ''**உடனூழியர்**'' என்பதாகும். இதே முறையில் சட்டகரை ''**உடன் மருகர்**'' என்று உரைத்து மகிழலாமல்லவா ?

பழக்கத்தின் வலிவு

இக்காலத்தில் எந்திரத்தால் செய்யப் பெற்ற எண்ணெய் ஆலைகள் இயங்கி வருகின்றன. ஆனால், சற்று முந்திய காலத்திலோ எருதுகள் இழுக்கும் எண்ணெய் ஆலைகள் இருந்தன. செக்குமாடுகள் என்று சொல்வது வழக்கம். செக்கிலே பூட்டப்பட்ட எருதுகளை அவிழ்த்துவிட்டுவிட்டாலும் அவை அந்தச் செக்கினையே சுற்றிச் சுற்றி வரும். அதற்குப் பழக்கமான வேலை அதுதான். இதே போன்று பதவியிலிருந்து ஒய்வு பெற்ற சிலர், பழைய அலுவலகத்துக்கு அடிக்கடி சென்று வருவார்கள். ஒய்வு பெற்றபின் அதிர்ச்சியடைந்து, செய்வதறியாது திகைப்பவர்கள் இவர்களாவர்.

மீன் விற்பனை செய்யும் பெண்மணியின் செய்தி சுவையானது. ஒவ்வொரு நாளும் அவர் தெருத்தெருவாகச் சென்று மீன்களை விற்று வருவார். களைத்துப் போய் இரவில் நன்றாகத் தூங்குவார். ஆனால், அப்போது அவருடைய தலைமாட்டில் அந்த மீன் கூடை இருக்கும். தலைமாடு, கால்மாடு என்னும் சொற்களை நாம் நன்கு அறிவோம். தலைப்பக்கம் கால்பக்கம் என்று அந்தச் சொற்கள் பொருள்படுகின்றன. ஒரு நாள் அந்தப் பெண்ணுக்குத் தூக்கம் வரவில்லை ஆம். தூக்கம் பிடிக்கவில்லை. உருண்டு உருண்டுபடுத்துப் பார்த்தார். ஏன் வழக்கம் போல் உறக்கம் ஓடிவரவில்லை என்பது அவருக்கும் புரியவில்லை. எழுந்து பார்த்தார். தலை மாட்டில் மீன் கூடை இல்லை. வீட்டிலுள்ள யாரோ அதை எடுத்து எங்கோ வைத்துவிட்டார்கள். அதைத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்து தலைமாட்டில் வைத்துக்கொண்டார். அதன் பின்னர் அவர் நன்றாக உறங்கினார், ஆழ்ந்த உறக்கம். கூடையின் மணம் கோடி நன்மை புரிந்தது. இதை ஆங்கிலத்தில் Force of habit என்று சொல்வார்கள். நாமும் பழகு தமிழில் ‘‘**பழக்கத்தின் வலிவு**’’ என்று பாங்குற மொழியலாமே!

அறிந்தேற்பு

அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் என்று வணிகர்கள் விளம்பரப்படுத்திக் கொள்ளும் முறையை அன்றாடம் நாம் கண்டு வருகின்றோம். இதை, ஆங்கிலத்தில், Government Recognised Institution என்று சொல்லலாம். Recognition என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான அழகிய தமிழ்ச் சொல் கிடைக்கின்றதா என்று பார்ப்போம். சிறப்புடைய ஒருவரை, அவருடைய சிறப்பறிந்து பாராட்டுவது Recognition ஆகும்.

''ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே – ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு''

என்று பாடுகின்றார், பைந்தமிழ்ப் பாட்டி ஔவையார்.

''**அரசறிய வீற்றிருந்த வாழ்வு**'' என்பது அவருடைய அருமையான விளக்கம். அரசன் அறியுமாறு பெருமையாக வாழுகின்ற வாழ்க்கை என்பது இதன் பொருளாகும். இன்னொரு பாடலையும் இங்கு நாம் நினைவுகூர்வோம். கல்வியிற் பெரிய கம்பர் பாடியுள்ளதாக ஒரு பாடலை நாம் குறிப்பிட்டு வருகின்றோம்.

''மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் – என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு''

என்பது அப்பாடலாகும். அரசறிய வீற்றிருத்தல் என்னும் கருத்தை ஔவையார் அருளியுள்ளதைக் கண்டு மகிழ்கின்றோம். அதே போன்று ''அரசு ஏற்றுக் கொள்ளுதல்'' என்னும் கருத்தையும் கம்பர் கவினுறக் காட்டுகின்றார். இருவர் விளக்கங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, Recognition என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் விரைந்து ஓடி வருவதை நாம் கண்டு களிக்கின்றோம். ''**அறிந்தேற்பு**'' என்னும் அழகிய சொல்லை நாம் இப்போது எதிர்ப்படுகின்றோம்.

Recognition = **அறிந்தேற்பு**

✲

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

சேமச் சக்கரம்

சீருந்துவில் சிறப்பாகப் பயணம் செய்துகொண்டிருக்கையில் வண்டி திடீரென்று நின்றுவிடுகிறது. கீழே இறங்கிப் பார்த்தால், சக்கரத்தில் துளைப்பு ஏற்பட்டுள்ள செய்தி நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. உடனே Stepney இருக்கிறதா, அதை எடு என்று பரபரப்புடன் பகருகின்றோம். வண்டியின் பின்புறத்தில் Stepney இருக்கிறது. பழுதுபட்ட சக்கரத்துக்குப் பதிலாக அந்த மாற்றுச் சக்கரத்தைப் பொருத்தி, மறுபடியும் பயணத்தைத் தொடருகின்றோம். இந்த Stepney என்னும் சொல்லுக்கு உரிய தமிழ்ச் சொல் என்ன என்பது ஒரு சுவையான வினாவாகும். சுவையான விடை கிடைக்கிறதா என்று பார்ப்போம்.

சங்க இலக்கியத்தைப் புரட்டிப் பார்த்தால், குறிப்பாக, புறநானூற்றுப் பாடல்களைப் புரட்டிப் பார்த்தால், நமக்குத் தேவைப்படும் ஆட்சிமொழிச் சொற்கள் அடுக்கடுக்காக அங்கே கிடைக்கின்றன. வண்டியின் அச்சு முரிந்துவிட்டால், அதற்கு மாற்றாகப் பயன்படுத்துவதற்கு ‘‘**சேம அச்சு**’’ கொண்டு செல்லப்பட்டதாகப் புறநானூற்று 102ஆம் பாடல் கூறுகின்றது. ‘‘**சேம அச்சு**’’ என்னும் பெயர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமக்குத் தெரிந்த செய்தியாகும். இதை நாம், இன்று தெரிந்து கொண்டால், Stepney என்னும் சொல்லுக்குச் சிறந்ததொரு மொழிபெயர்ப்பு கிடைத்து விடுமே. தமிழ்க்கடல் தருகின்ற தரமான முத்துக்களுள் ‘‘**சேம அச்சு**’’ ஒரு சிறந்த முத்தாகும். பழுதுபட்ட அச்சுக்குச் சேம அச்சு கிடைத்துவிட்டால், பழுதுபட்ட சக்கரத்துக்குச் ‘‘**சேம சக்கரம்**’’ கிடைத்துவிடுமே! என்னே புதுமை! பழைமையிலிருந்து கிடைத்த புதுமை.

Stepney = **சேமச் சக்கரம்**

ஐந்து உவமைகள்

தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெண்ணின் பெருமையை விண்ணின் உயரத்துக்கு உயர்த்திப் பேசியுள்ளார். இல்லற வியலும், இன்பத்துப் பாலும், பெண்ணின் பெருமைக்குக் கட்டியம் கூறுகின்றன. பெண்ணின் பெருமையைப் பேச வந்த வள்ளுவர், தமிழின் பெருமையையும் இணைத்துக் காட்டுகிறார். நுட்பங்கள் நிறைந்த திருக்குறட் பாக்களை எண்ணுந்தோறும் இன்பம் பிறக்கும். ஒரேவொரு குறட்பாவில் ''**செல்வம்**'' என்னும் சொல்லைச் செல்லமாக ஐந்து முறை அடுக்கிக் கூறியவராயிற்றே அவர்.

''செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.''

அழகு பெருக்கெடுத்தோடும் இந்தக் குறட்பாவை யாரும் மறந்து விட முடியாது. ஒன்றே முக்கால் அடியில் ஐந்து உவமைகளை அமைத்துப் பாட முடியுமா என்று வினவினால், முடியும் என்று விடை கூறுகிறார். ஒன்றே முக்கால் அடியில் உலகையே காட்ட வல்லவராயிற்றே வள்ளுவப் பெருந்தகை. அவருக்கு ஐந்து உவமைகள் என்னும் கணக்கு எம்மாத்திரம்?

''முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு.''

இவள் மேனியோ தளிரைப் போன்றது. பற்களோ முத்தைப் போன்றன. மணமோ மலரைப் போன்றது. கண்களோ வேலைப் போன்றன. தோளோ மூங்கிலைப் போன்றது என்று அடுக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். சொல் விளையாட்டு புரியும் சொற்சித்தராக அல்லவா அவர் திகழ்கின்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இணையற்ற சிறுகதை ஆசிரியராக வல்லவோ வள்ளுவர் விளங்கியுள்ளார். பெண்ணின் பேரழகைப் படம்பிடிக்கும் அவர், தமிழின் தனிப் பேரழகையும் இணைத்துக் காட்டியுள்ளமை தனிப் பெரும் சிறப்பாகும். ஐந்து உவமைகளும் நம் நெஞ்சை விட்டு நீங்கவே மாட்டா.

வளமார் தமிழுக்கு வாழ்த்து கூறுகிறார் வள்ளுவர்.

⁂

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின் ?

விழுமியார் உடன்பாடு

ஒன்றற்கொன்று உறவுடைய சொற்களை, அவற்றின் நுட்பமறிந்து, வேறுபடுத்திக் காணுதல் வேண்டும். Agreement, Contract, Treaty என்னும் சொற்களை எடுத்துக்கொள்வோம். இவை ஒவ்வொன்றுக்கும், பொருத்தமான மொழி பெயர்ப்புகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இல்லாவிட்டால், பெருங்குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

Treaty என்னும் சொல், நாடுகளுக்கு இடையே ஏற்படுகின்ற உடன்பாட்டினைக் குறிக்கும். இதற்கு ''**உடன்படிக்கை**'' என்னும் சொல், நீண்ட நாள்களாகப் புழக்கத்தில் இருக்கிறது. வரலாற்று நூல்களிலும், இந்தச் சொல், மிக முன்னதாகவே இடம்பெற்று விட்டது. Contract என்பது எழுதப்பெற்ற சட்டமுறையான உடன்பாடாகும். இதற்கு ''**ஒப்பந்தம்**'' என்னும் சொல் இனிமையாகப் பொருந்துகிறது. Agreement என்பது உறுதி செய்துகொள்ளும் ஒரு முறையாகும். இதற்கு ''**உடன்பாடு**'' என்னும் சொல் சாலப் பொருத்தமாகும். எனவே, Agreement உடன்பாடு, Contract ஒப்பந்தம், Treaty உடன்படிக்கை என்று தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, Gentleman's Agreement என்று ஒன்று இருக்கிறது. வாக்கு தவறாத தூயவர்கள் செய்து கொள்ளும் உடன்பாடாகும் இது.

''தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு''

என்று பேசுகிறார் பெருநாவலர். விழுமியார் வேறு யாருமில்லை. அவர்தாம் Gentleman.

Gentleman's Agreement - **விழுமியார் உடன்பாடு.**

ஒட்டனுக்கு மேல் உறவில்லை

"**ஒட்டனுக்கு மேல் உறவில்லை**" என்பது ஓர் அருமையான பழமொழி. இந்த ஒட்டன் என்பவர் யார் என்பதை நாம் கண்டுபிடித்தல் வேண்டும். "தங்கள் பாட்டனாரின் பெயரைச் சொல்லுங்கள்" என்றால் எல்லோரும் சொல்லிவிடுவார்கள். "பாட்டனாரின் தந்தையார் பெயர் தெரியுமா? பாட்டனாரின் தந்தையாரின் தந்தையார் பெயர் தெரியுமா?" என்று கேட்டால் எத்தனை பேருக்குத் தெரியுமென்று சொல்ல முடியும்?

அன்னையும் தந்தையும் முன்னறி தெய்வம். அன்னை நமக்கு அறுசுவையுண்டியளித்துப் போற்றிக் காத்துவருகிறார். தந்தையாரோ கண் போன்ற கல்வியைக் கொடுத்து வாழ்க்கையில் நம்மைக் கை தூக்கிவிடுகிறார். இருவரையும் தெய்வங்களாக நாம் போற்றுகின்றோம். அன்னையின் தந்தை, தந்தையின் தந்தை ஆகியோரை ஆங்கிலத்தில் Grand father என்று சொல்வார்கள். தமிழிலே "**பாட்டன்**" என்று கூறுகின்றோம்.

பாட்டனின் தந்தையை ஆங்கிலத்தில் Great Grand father என்று கூறுவார்கள். இவருக்குத் தமிழில் "**பூட்டன்**" என்று பெயர். பூட்டனின் தந்தையாருக்கு என்ன பெயர்? ஆங்கிலத்தில் Great Great Grand father என்று சொல்வார்கள். தமிழில் "**ஓட்டன்**" என்பதாகும் இவரை "**முப்பாட்டன்**" என்றும் சொல்வதுண்டு. ஆங்கிலத்தில் Great Great என்று அடுக்கிக் கொண்டே போகின்றார்கள். தமிழில் **பாட்டன், பூட்டன், ஓட்டன்** என்று கூறுகின்றோம்.

இப்பொழுதுதான் நம் பழமொழி விளக்கம் பெறுகின்றது. ஒட்டனுக்கு மேல் உறவில்லை. இதன் பொருள் என்ன? ஒட்டனுக்கு மேல் தெரியாது என்பதுதான் பொருள். ஏனெனில், குடும்ப வரலாற்றைப் போற்றிக் காக்கும் பழக்கம் அந்தக் காலத்தில் இல்லை.

எங்கள் வீட்டில் ஒரு பரம்புப் பலகை இருந்தது. உழுத கழனியைச் சமப்படுத்தும் பலகை. அதில் ''**அ.சி.மு.கோ.**'' என்னும் எழுத்துகள் செதுக்கப்பட்டிருந்தன. இதுதான் எங்கள் வீட்டுச் செப்பேடு! முழுப் பெயர்களை என் தந்தையாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஒட்டன் வரையில்தான் அதில் இருந்தது!

ஏனென்றால், ஒட்டனுக்கு மேல் உறவில்லையல்லவா?

தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

வலிமை பெருக்கி

நாம் சராசரி வசதிகளுடன் வாழ்க்கை நடத்தி வருவதாக வைத்துக்கொள்வோம். அப்போது, மேலும் சில வசதிகள் நமக்குத் தேவையென்று நாம் சிந்திக்கத் தொடங்குவோம். தங்களுடைய வசதிகளை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளவே யாவரும் விரும்புவர். இது இயற்கையே யாகும். இந்த நேரத்தில் Booster என்னும் ஆங்கிலச் சொல் நம் மனத்துக்கு ஓடிவருகின்றது. தாம் நடத்தி வரும் நிறுவனத்துக்கான விளம்பரங்களை மிகுதிப்படுத்துதல், ஆதாயம் வரும் வழிகளை அதிகப்படுத்துதல் போன்ற செயல்களை நாம் எண்ணிப் பார்த்தல்வேண்டும்.

மின்னாற்றல் நம் இல்லங்களுக்கு ஓரளவு கிடைத்துவருகின்றது. அதை அதிகப்படுத்துவதற்கு ஒரு கருவியை வாங்க விழைகின்றோம். இந்தக் கருவிக்கு Booster என்று பெயர்.

குழந்தைச் செல்வங்களுக்கு முறைப்படி ''**சொட்டு மருந்து**'' கொடுத்து வருகிறோம். அப்போது Booster Dose தேவையென்று கூறுகின்றார்கள். இளம்பிள்ளை வாத நோய், நம் குழந்தைகளை எட்டியும் பார்த்தல் கூடாது, என்று நாம் விரும்புகின்றோமல்லவா ? ஏற்கெனவே சொட்டு மருந்து கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், மேலும் கொடுக்க முனைவது, நோயை அறவே வாராமல் தடுப்பதை உறுதி செய்து கொள்வதற்கேயாகும்.

போர்க்காலங்களில், பொதுமக்களுக்குப் போதுமான மனவுறுதி தேவைப்படுகின்றது. மனவுறுதியை மக்களுக்கு ஊட்டுவது அரசினர் கடமையாகின்றது.

ஒரு நிறுவனத்துக்கு ஏற்கெனவே நல்ல பெயர் கிடைத்திருக்கும். அதன் ''**புகழுரு**'' பெருமையானதாக இருக்கும். ஆயினும், அதையும் மிகுதிப்படுத்த வேண்டுமென்று அந்த நிறுவனத்தின் அலுவலர்கள் ஆர்வமுடன் செயல்படுவர்.

அப்படியானால் Booster என்பதன் சரியான பொருள்தான் என்ன? திறன் பெருக்குகின்ற சில பொருள்கள் இருக்கின்றன வல்லவா? அதைப்போல Booster என்பதோ ''**வலிமையைப் பெருக்கும்**'' பொருளாக இருக்கிறது என்று கூறலாம். அவ்வாறாயின் Booster என்பது ''**வலிமை பெருக்கி**'' தானே.

Booster = **வலிமை பெருக்கி**

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

மகளிர் அணிகலன்கள்

மகளிர் அணியும் அணிகலன்களின் எண்ணிக்கை நமக்குத் தெரியுமா? அவர்கள் அணியும் பல்வேறு அணிகலன்கள் 145 என்று பட்டியலிட்டுக் காட்டுகிறார் பாவலரேறு பாலசுந்தரனார். அணிகலன்களின் பொதுப் பெயர்கள் மட்டுமே எட்டு வகையாக அமைகின்றனவென்று அவர் எடுத்துக் காட்டுகிறார்.

பொன்னகையா, புன்னகையா எது சிறந்தது என்று கேட்கின், அதற்கு விடைகாணுதல் முடியாது என்று கூறிவிடலாம்.

தலையில் அணியும் அணிகள் முதலாகப் பாதத்தில் அணியும் அணிகள் ஈறாக, வகை வகையான அணிகலன்கள் பழக்கத்தில் இருந்துள்ளன. பெரும்பாலானவை இன்றும் இருந்துவருகின்றன.

பழங்காலத்தில் புழக்கத்தில் இருந்த அணிகலன்கள் யாவும் இன்று பழக்கத்தில் இருந்து வருகின்றன என்று சொல்ல முடியாது. என் பாட்டியார் ''**பூச்சிக்கூடு**'' என்ற காதணியை அணிந்திருந்தார். அதனை இப்பொழுது யாரும் அணிந்து கொள்வதாகத் தெரியவில்லை. அந்த அணிகலனை மொரீசியசு நாட்டுப் பொருட்காட்சிச் சாலையில் பார்த்தேன். என் பாட்டியாரை நேரில் காண்பதைப் போன்ற உணர்ச்சியில் நான் உருகிப் போனேன்.

அணிகலன் வகைகளுள், நன்கு தெரிந்த பெயர்கள் சிலவற்றை மட்டும் உச்சரித்துப் பார்ப்போம். அட்டிகை, ஆரம், காசுமாலை, சங்கிலி, சரடு, ஓலை, தோடு, ஒட்டியாணம், மேகலை, காப்பு, கடயம், மிஞ்சி, மோதிரம், கொலுசு, சிலம்பு, வங்கி என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும். சொல்லச் சொல்ல மனத்தில் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது!

மாதவி அணிந்திருந்த அணிகலன்களை அழகுற விளக்கிக் கூறுகிறார் இளைய துறவி இளங்கோவடிகள். நகை வகைகள், நம்முடைய நாகரிகத்தை விளக்கிக் கூறுகின்றன.

மின்னுகின்ற பொன்னுக்கு நாம் மேலும் மெருகேற்றுவோம்.

❋

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

ஓசிக்கு ஆசி கூறுவோம்

பேச்சு வழக்கில் ''**ஓசி**'' என்னும் சொல் புழக்கத்தில் இருந்து வருகிறது. ''பயணச்சீட்டு வாங்காமலேயே ஓசியில் பயணம் செய்தார்'' என்று பேசுகிறோம். ''ஓசிச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்'' என்றும் சொல்வதுண்டு. நாசிக்குப் பொடி தேவைப்படும் போதெல்லாம் ஓசியாகவே வாங்கிக் காலத்தைக் கழிப்போரும் நிறைய உண்டு. இந்த ''**ஓசி**'' என்னும் சொல் எவ்வாறு ஏற்பட்டது என்பதைப் பார்ப்போம்.

நம் கடிதங்களை நாம் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கின்றோம். அஞ்சல் கட்டணங்களை அஞ்சல் துறையினர் அவ்வப்போது அறிவிப்பதற்கேற்ப, அஞ்சல் வில்லைகளை விலைக்கு வாங்கி அவற்றை ஒட்டி அனுப்புகிறோம். கட்டணங்கள் அச்சடிக்கப்பட்ட அஞ்சல் கடிதங்களையும் அஞ்சல் துறையினர் நமக்குக் கொடுக்கின்றனர். எது எப்படியிருப்பினும் உரிய அஞ்சல் கட்டணங்களைச் செலுத்திய பிறகே நம் கடிதங்கள் அஞ்சலில் சேர்க்கப்படுகின்றன.

அரசு அனுப்பும் அஞ்சல்களைப் பொறுத்தவரையில் ''Service Postage'' அஞ்சல் வில்லைகள் ஒட்டி அனுப்புவார்கள். இவற்றில் ''இந்திய அரசுப்பணி'' என்று அச்சடிக்கப்பட்டிருக்கும்.

ஆங்கிலேயர்கள் முதன் முதலில் நம் நாட்டுக்கு வந்தபோது East India Company என்ற ஒரு கம்பெனியை அமைத்துக் கொண்டார்கள். அந்தக் கம்பெனியார் அனுப்பிய கடிதங்களில் **OCS** என்னும் எழுத்துகள் அச்சடிக்கப்பட்டன. இவை **On Company's Service** என்னும் தொடரின் சுருக்கமாகும். கட்டணம் எதுவும் செலுத்தாமலே இந்தக் கடிதங்கள் சென்று சேர்ந்தன.

OCS என்னும் ஆங்கில எழுத்துகளே காலப்போக்கில் ''**ஓசி**'' என்னும் தமிழ் எழுத்துகளாக மாறிவிட்டன. ஓசிக்கு ஆசி கூறுவோம்.

*

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

சேர்ப்பு அறிவுரை

பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் சேர்ந்து படிக்க விண்ணப்பிக்கும் மாணவர்கள் Counselling என்னும் நேர்காணலுக்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறு நேரில் சென்று பேசும்போது, எந்தெந்தக் கல்லூரிகளில் இடங்கள் இருக்கின்றன, எந்தெந்தப் பாடத்தில் சேர்ந்து படிக்க வாய்ப்பு இருக்கிறது என்பன போன்ற செய்திகள் மாணவர்களுக்கு விளக்கப்படுகின்றன. கலந்து பேசிய பின்னர் மாணவர்கள் முடிவு எடுக்கின்றனர். சொந்த ஊருக்கு, எந்த ஊர் அருகில் இருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்கின்றனர்.

கல்லூரியில் சேருவதற்கான அறிவுரைகளைக் கல்வித்துறை அதிகாரிகள் வழங்குகின்றனர். இதனையே நாம் Admission Counselling என்று கூறுகின்றோம். அவ்வாறாயின் Counselling என்பது சேர்ப்பு அறிவுரை தானே.

Admission Counselling = **சேர்ப்பு அறிவுரை**

இன்னொரு சொல்லையும் ஈண்டு கருதுவது பொருத்த மானதாகும். Semester என்னும் சொல்லுக்கு உரிய பொருளென்ன என்று பார்ப்போம். ஒரு படிப்பு, நான்கு ஆண்டுகளுக்குரிய படிப்பாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தேர்வுகள் நடத்தி ''**வெற்றி தோல்விகளைத்**'' தீர்மானம் செய்கின்றனர். நம் நாட்டைப் பொறுத்தவரையில் Semester தேர்வுகள் ஆறுமாதங்களுக்கு ஒரு முறை நடைபெறுவது வழக்கமாக இருக்கையில், வேறு நாடுகளில் இந்தக் கால அளவு வேறுபடுகிறதென்பதையும் நாம் கருதல் வேண்டும்.

Semester என்பதற்கு இப்போதுள்ள மொழிபெயர்ப்பு ''**பருவம்**'' அல்லது ''**பருவநிலை**'' என்பதாகும். ''**பருவம்**'' என்னும் பெயர் பல்வேறு சூழ்நிலைகளில் பயன்படுகின்ற ஒரு பொதுப் பெயராக அமைகின்றது. ஆகவே, அதனை இந்த ஆங்கிலப் பெயருக்கு ஏற்றாற் போல், மாற்றியமைத்துக் கொள்வது தேவையாகும். ''**படிப்புப் பருவம்**'' என்று பகர்ந்தால், பொருள் நன்கு விளங்குமல்லவா?

Semester = **படிப்புப் பருவம்**

☀

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

பொருள் தெரிய வேண்டுமே !

புலவர் ஒருவர் என்னிடம் பேசும்போது பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம்பின்றே என்று அடிக்கடி கூறுவார். என்னுடைய வினாக்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், அவர் அவ்வாறு கூறுவார், என்று எண்ணிவிடுதல் வேண்டா. யாருடன் பேசினாலும் இந்தத் தொல்காப்பிய நூற்பாவை எடுத்துச் சொல்லாமல் விடமாட்டார். இந்தச் சிறிய நூற்பா எந்த அளவு அவரைக் கவர்ந்திருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். இது ஒரு பொன்னுரையாக, பழச்சுவையாக, பழமொழியாகவன்றோ விளங்குகின்றது! ''**பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம் பின்றே**''. ஒரு பொருளுக்கு ஒரு பொருள் கூறுகின்றோம். அதற்கு மேலும் வினாக்களைத் தொடுத்துக் கொண்டே சென்றால், ஒரு முடிவுக்கும் நாம் வர முடியாது என்று அறிந்துகொள்ளலாம்.

இது மிகுதிப் பொருளில் வந்தது! என்று கூறின், கேட்பவர் அமைதி பெறமாட்டார். ''**மிகுதி**'' என்றால் என்ன என்னும் புதிய வினாவைத் தொடுப்பார். ''**சால**'' என்பதுதான் மிகுதி என்று விடை கூறின், ''**சால**'' என்பது என்ன என்று கேட்பார். ''**சால**'' என்றால் ''**எத்துணையும் குறையாதது**'' என்று கூறின், எத்துணை என்றால் என்ன என்று கேட்பார். இவ்வாறு கேட்டுக்கொண்டே போனால், அதற்கு முடிவே கிடையாது. இது ஒரு பழைய விளக்கம்.

இன்றைக்கும் இவ்வாறு வினாவைக் கேட்டுத் துளைப்பவர்கள் நிறைய இருக்கின்றார்கள் அல்லவா ? இவர்களுக்கெல்லாம் ஓர் அரிய அறிவுரையை அன்றே தொல்காப்பியர் வழங்கி வைத்துள்ளார். தேவையற்ற குறுக்கு வினாக்களை நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதைப் பழம் போன்ற இந்த நூற்பா அல்லது பழமொழி நமக்குப் புகட்டுகின்றது.

சட்டம் பிறப்பதற்கு முன்பே பிறந்த
சட்டமல்லவா இது!

செறிவு வட்டு

புதிதாக இசைத் தட்டுகள் வந்த காலத்தில், நாம், அவற்றை வியந்து பாராட்டிக்கொண்டிருந்தோம். அதன் பின்னர், ஒலி நாடாக்கள் உருவெடுத்தன. இன்று ஒலிப்பேழைகள் இல்லாத இடமேயில்லை. Compact disc என்னும் கவின்மிகு தட்டும் வந்துள்ளது. ஆங்கிலப் பெயரில் வருகின்ற disc என்பது ''**வட்டு**'' என்று, நீண்ட நாள்களாகப் பழக்கத்துக்கு வந்துவிட்டது. சிலர் Compact disc என்பதைக் ''**கச்சித வட்டு**'' என்று மொழிபெயர்த்து விடுகிறார்கள். ஆயினும், இது முழுப் பொருளையும் தருவதாகத் தோன்றவில்லை. சொல்லுக்குச் சொல் செய்யப்படும் மொழிபெயர்ப்பாக இது அமைகிறது. ''இசைத் தட்டு'' என்று சொல்வதைப் போலக் ''**குறுந்தட்டு**'' என்றும் சொல்லலாம். ஆயினும், ''**குறுந்தகடு**'' என்று சிலர் மாற்றும் போது காரணம் புரியவில்லை.

Compact disc என்னும் சிறிய வட்டிலே பல்வேறு செய்திகள் பதிவுசெய்யப்படுகின்றன. தகவல்கள், உரைகள், பாடங்கள், பாடல்கள் போன்றவை பதிவு செய்யப்படுகின்றன. ஒரு சிறிய வட்டில் அல்லது தட்டில் பல்வேறு செய்திகள் செறிவாகப் பதிக்கப்படுகின்றன. எண்களின் வகையிலும் சேமித்து வைக்கப்படுகின்றன. நவீன வகையில் உருவாக்கப்பட்டு, நல்ல பல, பயன்களை நமக்கு அளிக்கும் இந்த வட்டினைப் பொருட்செறிவு பொலிவுறச் ''**செறிவு வட்டு**'' என்று செப்பி மகிழலாமே!

Compact disc = செறிவு வட்டு.

காதன்மை

பெரிய பதவிகளில் இருப்பவர்கள், வாய்மையாகவும், தூய்மையாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ளுதல் வேண்டும். எல்லாரிடமும் ஒருபடித்தாக நடந்துகொள்ளுதல் வேண்டும். வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேச்சுக்கே இடம் கொடுத்தல் கூடாது. தமக்கு வேண்டியவர் என்று ஒருவருக்குச் சலுகை காட்டிவிட்டால், அது, மற்றவர்களின் நலன்களைப் பாதித்துவிடக்கூடும். அப்போது நேர்மை தவறிவிட்டதாக, நீதி தவறிவிட்டதாக ஒரு குற்றச்சாட்டு ஏற்படுவது இயற்கையேயாகும். வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு பன்னெடுங்காலமாக இருந்துவந்துள்ளது. இது குறித்து வள்ளுவர் ஒரு கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

> ''காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
> பேதைமை எல்லாம் தரும்''

என்று பேசுகிறார் பெருநாவலர். ''**காதன்மை**'' என்றால் என்ன ? அது ''**காதலாந்தன்மை**'' என்று விரியும். இது அன்புடைமை என்னும் பொருளில் வந்தது. ''**காதன்மை கந்தா**'' என்று வரும்போது ''அன்புடைமை பற்றுக் கோடாக'' அல்லது ''**அன்புடைமை காரணமாக**'' என்று உணர்ந்துகொள்கின்றோம்.

''**வேண்டியவர்**'' என்னும் ஒரே காரணத்தால் தகுதியில்லாத ஒருவரைப் பொறுப்பில் அமர்த்திவிட்டால், அந்தச் செயல் பெருந்தீங்கினை விளைவித்துவிடும். முறைதவறிய செயல், முழுமையான தீங்கினைச் செய்துவிடும்.

Favouritism என்னும் ஒரு சொல் ஆங்கிலத்தில் இருக்கிறது. அதன் பொருள் என்ன என்று கூர்ந்து நோக்கினால், அதுதான் ''**காதன்மை**'' என்பது தெரியும். இந்த அரிய விளக்கத்தை எனக்குக் கொடுத்தருளிய பேராசிரியர் மு.ரா. பெருமாள் முதலியார் அவர்கள் என் நெஞ்சில் என்றும் நிலைத்து வாழ்கின்றார்.

Favouritism = காதன்மை.

✵

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பதின் பருவம்

பெண்களின் பருவ நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு பெயர்களைச் சூட்டி மகிழ்ந்துள்ளனர் நம் முன்னோர்கள். ஆண்களின் பருவ நிலைகளுக்கும் அழகான பெயர்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் விடலைப் பருவம். பதினாறு வயது முதற்கொண்டு முப்பது வயது வரையிலான பருவமே விடலைப் பருவம். முப்பதில் முறுக்கு, நாற்பதில் நடுக்கம், ஐம்பதில் அசைவு, அறுபதில் ஆட்டம், எழுபதில் ஏக்கம், எண்பதில் தூக்கம் என்று சொல்வார்கள்.

குசேலோபாக்கியானத்தில் ஓர் அருமையான பாடல் வருகிறது:

மதலையைப் பெறுநாள் துன்பம்
  வளர்த்திடும் நாளும் துன்பம்
விதலைநோய் அடையின் துன்பம்
  வியன்பரு வத்துந் துன்பம்
கதமுறு காலர் வந்து
  கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால்
  எற்றைக்குந் துன்ப மானால்.

நடுங்குதற்குரிய நோய்கள் வந்துற்றாலும் துக்கம். பெருமையைத் தரும் காளைப் பருவத்தும் துக்கம். குழந்தைப் பருவம் முதல் பல்வேறு பருவங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது இப்பாடல். ஆங்கிலத்தில் Teen Age என்று சொல்லுகின்ற ஒரு வழக்கம் இருந்துவருகிறது. பதின்மூன்று முதல் பத்தொன்பது வயது வரையிலான காலப்பகுதியில் உள்ளவரை Teen Ager என்று கூறுகின்றோம். Thirteen, Fourteen, Fifteen, Sixteen, Seventeen, Eighteen, Nineteen என்னும் ஆங்கில எண்கள், இந்தப் பருவத்துக்குரிய எண்களாகும். இதனைப் ''**பதின்பருவம்**'' என்று அழைக்கலாமல்லவா? இப்பருவத்தினரை Teen Ager என்றும் அழைக்கலாமே. (ஏற்கெனவே நாம் Matriculation School என்பதைப் பதின் நிலைப் பள்ளி என்று கண்டிருக்கிறோம். இதே முறையில் அமைகின்ற பெயர்தான் பதின் பருவம்)

Teen age = பதின் பருவம்.

✲

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

செயலாளர்

எந்த நிறுவனமாக இருந்தாலும், அந்த நிறுவனத்தில் ஒரு Secretary இருப்பார். ஒன்றுக்கு மேற்பட்ட Secretary- களும் இருப்பார்கள். இந்தச் சொல் அமைந்த விதம் சிறப்பானதாகும். அதாவது Secretary is one who maintains secrets. மறையங்களைக் காப்பாற்றி வைத்திருப்பவர்தாம் Secretary. இதிலிருந்தே அந்தப் பதவி எவ்வளவு பொறுப்பானது என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இன்று இதற்கு இரண்டு மொழிபெயர்ப்புகள் இருக்கின்றன. ஒன்று ''செயலாளர்'' இன்னொன்று ''**செயலர்**''. சிலர் செயலாளர் என்று எழுதிவருகின்றார்கள். வேறு சிலர் செயலர் என்றே குறிப்பிடுகின்றார்கள். செயலாளர் என்னும் பெயர் நீளமாக இருக்கிறது, செயலர் என்னும் பெயர் சுருக்கமாக இருக்கிறது என்பது அவர்களின் வாதம். செயலர் என்றால் வேறு யாருமில்லை. இட்ட பணியைத் தட்டாமல் செய்பவர் என்று ஆகிவிடும். Clerk என்றால் ''எழுத்தர்.'' Writer என்றால் ''**எழுத்தாளர்.**'' எழுத்தை ஆள்பவர் எழுத்தாளர். இதேபோல் செயலை ஆள்பவர் செயலாளர் என்னும் பெருமித நிலையை அடைகின்றார். சுருக்கம் தேவைதான். ஆனால், அது எல்லா இடத்திலும் பொருந்தாது. ஒரு பழைய பாடலை நினைவுகூர்வோம்:

தாளாளன் என்பான் கடன்பட வாழாதான்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

தாளாளன், வேளாளன், கோளாளன் என்னும் சொல்லாட்சிகளை நோக்கும்போது ''**செயலாளர்**'' என்பதே சிறப்பான பெயர் என்று தெற்றென விளங்குகின்றதல்லவா? செயலை உடையார் செயலர் என்றால், செயலை ஆள்பவர் செயலாளர். யார் நமக்கு வேண்டும்? செயலாளர்தானே?

மலையின் வகைகள்

நம் முன்னோர்கள் சொற்களை அமைத்த விதம், நம்மைச் சொக்க வைக்கிறது என்று கூறின், அது சிறிதும் மிகையாகாது. பொருள் பொதிந்த முறையிலும், பொருத்தமான முறையிலும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். அவர்கள் அரிதின் முயன்று கட்டிய வீட்டில் நாம் எளிதில் குடிபுகுந்து இன்புற்று வாழ்ந்து வருகின்றோம்.

''**மலை**'' என்னும் இரண்டெழுத்துச் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதற்கு எத்தனை வேறு பெயர்கள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்த்தால், வியந்து போகிறோம். அவற்றுள் சிலவற்றை மட்டும் நாம் எண்ணிப் பார்ப்போம்.

அடுக்கடுக்காக அமைந்த மலையை ''**அடுக்கல்**'' என்று கூறுகின்றோம். ஓங்கி உயர்ந்துள்ள மலைக்கு ''**ஓங்கல்**'' என்று பெயர். உயரம் குன்றிய மலையைக் ''**குன்று**'' என்கிறோம். குவிந்த உச்சியையுடைய மலைக்குக் ''**குவடு**'' என்று பெயர். மலை வளர்வது போல, குவடு என்னும் சொல்லும் நீண்டு ''**கோடு**'' என்றாகிவிட்டது! திருச்செங்கோடு நமக்கு நன்கு தெரியுமல்லவா ? தொலைவிலுள்ளவர்க்கும் விளங்கித் தோன்றும் மலையைப் ''**பிறங்கல்**'' என்று பேசுகின்றோம். தன்னைத் தானே விளம்பரப் படுத்திக் கொள்ளும் மலையாகும் இது. மலைகளுக்குள்ளேயும் ''**யார் பெரியவன்**'' என்ற சச்சரவு நடைபெறும் போலும்!

''**வரை**'' என்னும் சொல் ''**எல்லை**'' என்னும் பொருளைத் தருகின்றது. எனவே நாட்டின் எல்லையை வரைந்து காட்டும் மலையை ''**வரை**'' என்று பேசுகிறோம். ஊர்களையும், காடுகளையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துப் பெருமையுடன் இடையே நிற்கும் மலையே ''**விலங்கல்**''. கடும்புயல், பெருவெள்ளம் போன்றவற்றைத் தாங்கிக் கொண்டு வெற்றிக்கொடி நாட்டி நிற்கும் மலைக்கு ''**வெற்பு**'' என்று பெயர். இத்தகைய பொருள் பொதிந்த சொற்களைப் பெற்றுத் திகழும் நம் மொழியும் வெற்றிக்கொடி நாட்டி நிற்பதில் வியப்பேதும் இல்லையல்லவா ?

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

கருத்தளிக்குநர்

Consultant என்பவர் மிகவும் முக்கியமானவர். இவர் ஆற்றும்பணி, மிக முக்கியமான பணியாகும். கருத்தாழம் மிக்க இந்த ஆங்கிலச் சொல்லுக்கு நாம் கருத்துச் செறிவுடைய தமிழ்ச் சொல்லைக் காணுதல் வேண்டும். Consult, Consultation என்னும் சொற்கள் மிகவும் பழக்கமான சொற்கள். இவற்றுக்கு உரிய ''**கலந்தாய்வு செய்**'', ''**கலந்தாய்வு செய்தல்**'' என்னும் சொற்களும் மிகவும் பழக்கமானவை.

தொழில் நுட்பம் வாய்ந்தவர்களோடு கலந்தாய்வு செய்வது நமக்கு அவ்வப்போது தேவைப்படுகிறது. அந்த நேரங்களில் நாம், தொழில்நுட்ப வல்லுநர்களை அணுகுகின்றோம். சில சமயங்களில் வழக்கறிஞர்களை நாடிச் செல்கின்றோம். சில நேரங்களில் மருத்துவர்களைத் தேடிச் செல்கின்றோம். சில நேரங்களில் பொறியியல் அறிஞர்களின் அறிவுரையை வேண்டிச் செல்கிறோம்.

அகராதிகள் சரியாக வழிகாட்டுவதில்லை. Consultant என்பவர் தொழில் நுட்ப அறிவுரை வழங்குகின்றார் என்பது மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. ''**கலந்தறிதற்குரியர்**'' என்று சில அகராதிகள் செப்புகின்றன. இதில் சொல்லாக்க வடிவம் சிறப்பாக இல்லை.

வல்லுநரைத் தேடிச் செல்கின்றோம். நம்முடைய சிக்கல்களை முழுவதுமாக அவரிடம் விளக்கிக் கூறுகின்றோம். அதன் பின்னர்த் தேவையான, மேலுமான, விவரங்களை அவர் நம்மிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு, நன்றாக ஆராய்ந்து பார்த்து, இறுதியான – அவருடைய கருத்தை நமக்கு வழங்குகின்றார். அவ்வாறாயின் ''**கருத்தளிக்குநர்**'' என்னும் சொல் அழகாகப் பொருந்துமல்லவா?

Consultant = கருத்தளிக்குநர்.

செவ்வி

தமிழ் மொழி இனிமையான மொழி; தொன்மையான மொழி; வளமான மொழி என்னும் செய்திகளை நாம் நன்கு அறிவோம். தமிழின் வளத்துக்கு இங்கு ஓர் எடுத்துக்காட்டினைப் பார்ப்போம். Opportunity என்னும் ஆங்கிலச் சொல்லை ஆய்ந்து பார்ப்போம். இதன் பொருளை ஆங்கிலத்தில் Favourable Juncture, Good Chance, Opening என்றெல்லாம் விளக்குவார்கள்.

இதே முறையில் இதனைத் தமிழில் விளக்கமுடியுமா என்னும் ஐயம் எழுவது இயற்கை. ஆயினும், இதைவிடச் சிறப்பாகத் தமிழில் விளக்க முடியும் என்ற முடிவுக்கே நாம் வருவோம்.

தமிழில் சொல்லும்போது ''**செவ்வி**'', ''**தறுவாய்**'', ''**வாய்ப்பு வேளை**'', ''**வேளை வாய்ப்பு**'', ''**நல்வாய்ப்பு**'', ''**வாய்ப்புவழி**'' என்றெல்லாம் கூறமுடிகிறது. இவற்றுள் **செவ்வி** என்னும் ஒரு சொல்லை மட்டும் உரைகல்லில் வைத்து உரைத்துப் பார்ப்போம். ''ஏற்ற சமயம், காட்சி, மலரும் பருவத்திலுள்ள அரும்பு, பக்குவம், புதுமை, அழகு, சுவை, வாசனை, தன்மை, தகுதி'' என்று எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. இவை தமிழின் வளத்துக்கு அருமையான சான்றுகளாக அமைகின்றன. Opportunity என்னும் சொல்லுக்கு ''**வாய்ப்பு**'' என்னும் பொதுவான பொருள் இருக்கிறது. Opportune Moment என்று சொல்லும் போது ''**செவ்வி**'' என்னும் செந்தமிழ்ச் சொல் எத்துணை இனிமையாகப் பொருந்துகிறது என்பதைக் கண்டு எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றோம். பரிந்துரை செய்பவர்கள் ''**செவ்வி**'' பார்த்துப் பரிந்துரை செய்வார்கள். செவ்விதான் Opportunity. செந்தமிழைச் செழுந்தமிழாக்குவோம்.

Opportunity = செவ்வி.

மருதநிலத்தின் மாண்பு

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். மருதத்தின் மாண்புகளையெல்லாம் நம் புலவர்கள் நன்கு எடுத்து விளக்கியுள்ளனர். வளங்கொழிக்கும் வயல்கள், நமக்கு உண்ண உணவை உண்டாக்கித் தருகின்றன. இந்த வயல்கள் குறிஞ்சியும், முல்லையும் போல வலிமை இல்லாதவை. வலிமையில்லாத நிலமாகையால் ''**வயல்**'' எனப்பட்டது.

நன்செய் நிலங்களுக்கு நல்ல பல பெயர்களை உருவாக்கியுள்ளனர். ''நான் கழனிக்குச் சென்று வந்தேன்'' என்று கிராம மக்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். கழையும் நெல்லும், அதாவது கரும்பும் நெல்லும் விளையுமிடம், ''**கழனி**'' என்றாகியுள்ளது. பண்படுத்திச் செய்யப்பட்ட நிலத்தை நம் முன்னோர்கள் ''**செய்**'' என்று வழங்கினர். இது நன்செய், புன்செய் என்று இருவகைப்படும். நெல், கரும்பு முதலியவை விளையும் நிலம் நன்செய். கம்பு, கேழ்வரகு சோளம், முதலியவை விளையும் நிலம் புன்செய்.

விளைநிலத்தைக் குறிக்கும் சொற்கள் இன்னும் பல இருக்கின்றன. அவை அனைத்தும் இயல்பான முறையில் எழுந்துள்ள அரிய சொற்களாகும். நெல் வயலைச் சேறாக்கிப் பண்படுத்துகின்றார்கள். ''**சேறு**'' என்னும் சொல் ''**செறு**'' என்று குறுகி விளைநிலத்தைக் குறிக்கலாயிற்று. பண்ணை, பணை என்னும் சொற்களும் பண்படுத்தப்பெற்ற நெல் வயலைக் குறித்து நிற்பதைப் பார்க்கின்றோம்.

வரம்பு என்னும் சொல் வரப்பாக மாறி ''**வரப்புள்**'' என்னும் சொல் தோன்றி, விளைநிலத்தைக் குறிப்பதாயிற்று. வரம்பு செய்யப்பட்ட இடம், இவ்வாறு விளைநிலத்துக்குப் பெயராக வந்துள்ளது. நீர்வளம்மிக்க விளை நிலத்தைக் குறிப்பதற்கு எத்தனை எத்தனை சொற்கள் இருக்கின்றன என்பதை எண்ணும்போது நாம் மெய்சிலிர்த்துப் போகின்றோம். மொழியினை வளப்படுத்திய முன்னோர்களுக்கு நாம் நன்றிக்கடன் பட்டிருக்கின்றோமல்லவா ?

✵

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு.

சால மிகுதி, சாலக் குறைவு

மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது Too High என்னும் தொடரும், Too Low என்னும் தொடரும், எங்களுக்கு இடர்செய்தன. மிக அதிகம், மிகக் குறைவு என்று சொல்லிப் பார்த்தால் அவை பொருந்தவில்லை. இவை Very High, Very Low என்னும் தொடர்களுக்கே பொருந்தும் என்று தெரிந்தது. ஆனால் Too என்னும் சொல் ''**அளவுக்கு மேல்**'' என்னும் பொருளைத் தருகின்றதல்லவா? அளவுக்கு மேல் அதிகமானது, அளவுக்குமேல் குறைவானது என்ற பொருள் ஏற்படுதல் வேண்டுமே என்று தயக்கம் கொண்டோம்.

நண்பர் ஒருவர் ''**சால மிகுதி**'', ''**சாலக் குறைவு**'' என்று சொல்லலாமே என்று எடுத்துக் கூறினார். ''**சால**'' என்று சொன்னாலும் ''**அதிகம்**'' என்னும் பொருள்தானே ஏற்படுமென்று அவரிடம் எடுத்துக் கூறினோம். அவரோ விடுவதாயில்லை. நறுக்கென்று அருமையான குறட்பா ஒன்றினை எடுத்து நவின்றார்.

''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''

என்பது தான் அந்த அருமையான குறட்பா.

மயிலிறகு ஏற்றிய வண்டியே யானாலும், அந்தப் பொருளையும், அளவோடு ஏற்றாமல், அளவுக்குமேல் அதிகமாக ஏற்றினால், வண்டியின் அச்சு முரிந்துபோகும்.

இந்தக் குறளில் ''**சால**'' என்னும் சொல் அளவுக்கு மேல் என்னும் பொருளில் வந்திருப்பதைக் கண்டு களிக்கின்றோம். வள்ளுவர்க்கு நாம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

Too High	=	**சால மிகுதி**
Too Low	=	**சாலக் குறைவு.**

☼

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

பால் மாறுதல்

சென்னை நகரிலும் பிற ஊர்களிலும் ''**பால் மாறுதல்**'' என்னும் பேச்சு வழக்கு காணப்படுகிறது. இந்தக் கூட்டுச் சொல் நறுந்தமிழ்ச் சொல்லாக இருப்பதால் அதன் சரியான பொருளைக் காண்பதில் ஆர்வம் மேலிடுகிறது. ''**பால்**'' என்னும் சொல்லுக்குப் பதினேழு பொருள்கள் இருக்கின்றன. ''**பால்**'' என்னும் சொல்லின் அடிப்படையாக எழுந்த சொற்களோ நாற்பது, ஐம்பது இருக்கின்றன. ''**பால் மாறுதல்**'' என்னும் சொல்லின் நடைமுறைப் பொருளென்ன? ''**பால்**''என்னும் சொல்லின் பல்வேறு பொருள்களுள் எந்தப் பொருளையொட்டி இந்தச் சொல் எழுந்துள்ளது என்பதை ஆராய்ந்து பார்க்கின், பாலின் சுவைபோன்று இனிக்குமல்லவா?

''**பால் மாறுதல்**'' என்பதற்குப் பால்வற்றிப் போதல் என்னும் ஒரு பொருளுமுண்டு. சோம்பியிருத்தல் என்னும் பொருளும் இருக்கிறது. சோம்பியிருத்தல் என்பது சிந்தனையில் வைத்துக் கொள்ளத்தக்க பொருளாகும். ''**ஊழ்**'' என்ற சொல்லை உள்ளடக்கியதாக இருக்குமோ என்று எண்ணவும் தோன்றும்.

''தம்பீ ஓடிப்போய் ஒரு பால் பொட்டலம் வாங்கி வா'' என்று நாம் சொல்வதாக வைத்துக்கொள்வோம். அப்போது அந்தப் பையன் விரைந்து செல்லுதல்வேண்டும். அதைவிடுத்து ''பால் கடை நெடுந் தொலைவிலிருக்கிறதே'' என்று முணுமுணுத்தால், அவன் தயங்குவது நன்றாகத் தெரிந்துவிடுகிறது. அப்போது நாம் ''பால் மாறாமல் சென்று வா'' என்று சொல்வோம். எனவே, ''**பால் மாறுதல்**'' என்பது தயங்குதல் அல்லது பின்வாங்குதல் என்று பொருளாகிவிடுகிறது. நாமும் ''**பால் மாறாமல்**'' உரிய பொருளைக் காண அரிய முயற்சி செய்துள்ளோமல்லவா?

❊

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தொடர் கோப்பு

நான் தலைமைச் செயலகத்தில், அந்தக் காலத்தில், புதிதாக வேலைக்குச் சேர்ந்தேன். அந்த Section- ல் போய் உட்காருங்கள் என்று பணித்தார்கள். உட்கார்ந்து கொண்டு, திருதிருவென்று விழித்துக்கொண்டிருந்தேன். கண்காணிப்பாளர் வந்தார். சிறிது நேரம் கழித்து, ‘இன்றைக்கு வந்த Current- ஐ எல்லாம் பதிவு செய்யுங்கள் என்றார். Current என்றால் என்ன? ஒன்றுமே புரிய வில்லை. பக்கத்திலிருந்த நண்பரை நெருங்கி, மெதுவாக Current என்றால் என்ன? என்று கேட்டேன். புன்னகை தவழும் முகத்துடன் இன்றைக்குப் புதிதாக வந்த கடிதங்களை Current என்று சொல்வது வழக்கம் என்றார் அவர். இதற்குப் பெயர்தான் Administrative Language போலும் என்று புரிந்துகொண்டேன். Current என்றால் மின்சாரம் என்பது பொதுவான செய்தி. ஆனால், ஆட்சி மொழியில் அது எவ்வாறு மாறியுள்ளது என்பதை அறிந்துகொண்டேன். இதுவே, Current File என்னும் தொடராக வரும்போது, ‘**நடப்புக் கோப்பு**’ என்று கூறுகின்றோம். ஏனென்றால், வருகின்ற ஒவ்வொரு கடிதமும் வரிசையாகக் கோக்கப்படுகிறது. நடப்புக் கோப்பு அல்லாமல், குறிப்புகள் எழுதப் பெறும் கோப்பும், அதே கோப்பில் இருக்கிறது. இதனை Note File என்று சொல்கிறோம்.

சுவையான இன்னொரு செய்தியையும் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். Running File என்றும் ஒரு கோப்பு இருக்கிறது. Running File என்பதனை ''**ஓட்டக் கோப்பு**'' என்று ஒருவர் மொழி பெயர்த்துவிட்டார்! ஒரு பொருள் குறித்து, அவ்வப்போது வருகின்ற கடிதங்களை, ஒரே கோப்பில், அடுத்தடுத்துக் கோத்து வைக்கின்றோம். இதற்குப் பெயர்தான் Running File. இதனைத் '**தொடர் கோப்பு**' என்று சொல்லித் தமிழின் பெருமையைத் தரணிக்கு அறிவிக்கலாமே.

கோப்புகள் பலவிதம் என்று சொல்லி மகிழலாமல்லவா?

❁

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

மலரின் பருவநிலைகள்

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்"

என்பது வள்ளுவர் வாக்கு. மென்மையான பொருள்கள் எத்தனையோ இருந்தாலும், மலரைப் போன்ற மென்மையான பொருள் எதுவுமே இல்லை. ஏனென்றால், மலரின் மணம் மிகமிக நுட்பமானது. நறு மணத்தை நாம் மூக்கினால் நுகரலாம். ஆனால், அதனைக் கண்ணால் காண முடியாது. அதனால்தான் ''நாற்றத்தின் நேரியாய்'' — ''மலரின் மணத்திற்கு ஒப்பானவனே'' என்று சிவனைப் பாராட்டுகின்றார், திருவாசகத் தேன் வழங்கிய மணிவாசகர்.

நமக்கு மகிழ்ச்சியூட்டும் மலர்களையெல்லாம் நம் முன்னோர்கள் கூர்ந்து கவனித்துள்ளார்கள். அவற்றின் பல்வேறு பருவ நிலைகளுக்கும் அழகிய பெயர்களை அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.

'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்'

என்று பேசுகிறார் பெருநாவலர்.

அரும்பு, போது, மலர் என்னும் மலரின் மூன்று பருவநிலைகளைப் படம் பிடிக்கிறார், திருவள்ளுவர். பூவின் முதல் நிலை அரும்பு. அரும் பூ – அருமையான பூ – அரும்பு என்று குறுகிநின்றது. முகிழ்ந்து வரும்போது, அந்த அரும்பினை மொட்டு என்று கூறுகின்றோம். எழில் சொட்டுகின்ற காரணத்தால் அது மொட்டு என்று ஆகியது. இதற்கு இன்னொருபெயராக இருப்பது முகை. அரும்பாக இருந்தது, மொட்டாக மாறி, முழுமை பெற்று மலரும் தறுவாயில் இருக்கும் பூவினைப் ''போது'' என்று குறிப்பிடுகின்றோம். அது, எப்போது விரியும், என்று தெரியாத போது, போதாகி நிற்கிறது. இதழ்கள் விரிந்துவிட்டால், அது மலர் என்னும் பெயரைப் பெற்று விடுகின்றது. நன்றாக அலர்ந்து விட்டால் அலர் என்னும் பெயரைத் தாங்கி நிற்கிறது. தோற்ற முண்டேல் மறைவுமுண்டு. அரும்பாகத் தோன்றிய மலர், நன்றாக விரிந்து, முழுமைபெற்று, இப்பொழுது உதிர்ந்துவிடுகிறது. கீழே விழுந்துவிட்டது என்றே வைத்துக்கொள்வோம். அப்போது அதற்கு ''வீ'' என்னும் பெயர் ஏற்பட்டுவிடுகிறது. தோற்றமும், வளர்ச்சியும், வீழ்ச்சியும் நன்கு தெரியும் வண்ணம், அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ என்று அடுக்கிச்சொன்ன, நம் முன்னோர்களை நாம் மனமாரப் பாராட்டி மகிழ்தல்வேண்டுமல்லவா ?

❃

அடிப்பீட மின்விசிறி

நம்முடைய முன்னோர்கள் பனை விசிறியைப் பயன்படுத்தி வந்தார்கள். தென்னங் கீற்றால் பின்னப்பட்ட விசிறியையும் வைத்திருந்தார்கள். வெட்டிவேர் விசிறியும் உண்டு. இன்றுகூட இத்தகைய விசிறிகளை நம் நாட்டவர் இல்லங்களில் பார்க்கமுடியும். கோடைக் காலத்தில் பனை ஓலை விசிறிகள் விற்பனைக்கு நிறைய வரும்.

இன்னொரு வகையான விசிறியும் நமக்குத் தெரியுமல்லவா? அவர்களைத் ''**திரைப்பட விசிறிகள்**'' என்று நாம் மகிழ்ச்சியாகக் குறிப்பிடுவோம். திரைப்படங்களில் அளவுக்கு மீறிய ஆர்வமுடையவர்களுக்கு Fanatics என்று பெயர். இந்தப் பெயர் தான் அழகிய பெயராக Fan (விசிறி) என்று சுருங்கியது என்பதை அறியும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது.

நவீன காலத்தில் விதம் விதமான மின்விசிறிகள் வந்து விட்டன. அவற்றுள் Exhaust Fan, Pedestal Fan போன்ற விசிறிகளும் இருப்பதைப் பார்க்கிறோம்.

அறைக்குள் இருக்கும் தீய காற்று, புகை முதலானவற்றை வெளியேற்றுவதற்கு Exhaust Fan தேவைப்படுகிறது. உள்ளிருக்கும் காற்று வெளியேறும்போது அங்குப் புதிதாக நல்ல காற்று புகுந்து புழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கெட்ட காற்றை வெளியேற்றி நல்ல காற்றை நமக்கு வழங்குகின்ற மின் விசிறியை ''**வெளியேற்று மின்விசிறி**'' என்று விளம்பி மகிழ்ச்சியடையலாமல்லவா?

Pedestal என்னும் சொல்லை நாம் ''**பீடம்**'' என்று வழங்குகின்றோம். Pedestal Fan என்று வரும்போது அந்த மின்விசிறியின் அமைப்பு நமக்கு நன்கு தெரிகிறது. அடிப்பகுதி பீடம் போல் இருக்கிறது. அதன்மீது உயரமான ஒரு தண்டு, உச்சியில் மின்விசிறி. இந்த மின்விசிறி சுழன்று சுழன்று யாவர்க்கும் காற்றினை அள்ளி வழங்குகின்றது. இதனை ''**அடிப்பீட மின்விசிறி**'' என்று அழகு தமிழில் அறிவித்து மகிழலாமே!

Exhaust Fan	=	**வெளியேற்று மின்விசிறி**
Pedestal Fan	=	**அடிப்பீட மின்விசிறி.**

❊

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றும் கொல்லோ உலகு.

கலைப்புல முதல்வர்

தமிழ்நாட்டு Chief Minister அவர்களைத் ''**தமிழக முதல்வர்**'' என்று குறிப்பிடுகின்றோம். ஒரு கல்லூரியின் Principal அவர்களைக் ''**கல்லூரி முதல்வர்**'' என்று வழங்குகின்றோம். இப்பெயர்கள் நமக்கு நன்கு பழகிவிட்டன. இவற்றைத் தவிர இன்னொரு பதவியும் இருக்கின்றது. ஆம், நான் Dean என்னும் பதவிப் பெயரைத்தான் குறிப்பிடுகின்றேன். இதற்குரிய அழகிய, சுருக்கமான, பொருத்தமான ஒரு பெயரை நாம் காணவேண்டும். இதற்கான ஆங்கில விளக்கம் The head of a University Department of Studies என்பதாகும்.

அரசைப் பொறுத்தவரையில், பல்வேறு Departments இருக்கின்றன. ஒவ்வொரு Department ஐயும் ''**துறை**'' என்னும் பெயரால் வழங்குகின்றோம். ''**கல்வித்துறை**'' போன்று பல்வேறு துறைகள் பல்கி இருக்கின்றன. 'துறை' என்னும் சொல்லுக்கு ஈடாகத் ''**திணைக்களம்**'' என்னும் சொல்லை இலங்கையில் பயன்படுத்துகின்றார்கள்.

ஒரு பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், அங்கேயும் பல்வேறு ஆராய்ச்சித் துறைகள் இருக்கின்றன. இவற்றைப் ''**புலம்**'' என்னும் பெயரால் வழங்குகின்றோம். மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் மருத்துவமனைக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் பொதுவாக ஒரு Dean இருக்கின்றார். அப்போது அவரை மருத்துவமனை முதல்வர், மருத்துவக் கல்லூரி முதல்வர் என்று எளிதாகச் சுட்டமுடியும்.

பொறியியல் கல்லூரி போன்ற சில கல்லூரிகளில் ஒரே கல்லூரியில் Principal–லும் இருக்கிறார், Dean–ம் இருக்கிறார்.இப்பொழுது Dean என்பதற்குத் தனியான தமிழ்ப்பெயர் தேவைப்படுகிறது. முன்னர்ச் சொல்லியபடி பல்வேறு கலைப்புலங்களுக்குத் தலைவராக ஒரு முதல்வர் இருக்கிறார். இவரைக் '**கலைப்புல முதல்வர்**' என்று கனிவாக வழங்கலாமே.

Principal	=	கல்லூரி முதல்வர் என இருப்பதைப் போல
Dean	=	கலைப்புல முதல்வர் என இருக்கலாமே.

✡

நத்தம்போல் கேடும் உளதுஆகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.

ஓட்டாரம்

பேச்சுவழக்குச் சொற்களில் பல, நமக்குப் பெரிதும் மகிழ்ச்சி யூட்டுகின்றன. நாம் நடந்து செல்லும்போது, சாலையில் மேடு பள்ளங்கள் இருப்பின் தடுமாற்றம் ஏற்படுகிறது. வாழ்க்கையில் மேடு பள்ளங்கள் இருப்பதைப்போலச் சாலையிலும் மேடு பள்ளங்கள் இருக்கத்தானே செய்யும் என்று விளக்கம் கூறலாம்.

சாலைகள் சரிவரப் பராமரிக்கப்பட்டால் மேடு பள்ளங்கள் எளிதில் தவிர்க்கப்பட முடியுமல்லவா ? தடங்கல்கள் இருந்தாலும், படுகுழிகள் இருந்தாலும், முதியோர்கள் கீழே விழுந்து இன்னலுறுவதைப் பார்க்கின்றோம். சாலைகள், ஒரே சீராக இருத்தல்வேண்டும். அதாவது சமதரையாக இருத்தல்வேண்டும்.

''**சமதரை**'' என்பதை Level Ground என்று கூறுகின்றோம். வளமான தமிழ் மொழியில் இதற்கொரு மாற்றுச்சொல் இருக்கிறதா என்று கேட்கின் ''**இருக்கிறது**'' என்னும் விடை உடனே கிடைக்கும். கிராமப்புறங்களில் '**தன்தரை**' என்று சொல்வார்கள். அதுதான் Level Ground.

இன்னொரு சொல்லையும் இங்கே நினைவு கூர்வோம். ''அவர் பிடிவாதமாகப் பேசுகிறார்'' என்று சொல்லும் வழக்கம்

இருக்கிறது. ''**பிடிவாதம்**'' என்னும் சொல் நன்கு தெரிந்த சொல். 'பிடித்த முயலுக்கு இரண்டேகால் என்று பேசுகின்றார்; விடாப்பிடியாக இருக்கிறார்' என்றெல்லாம் பேசுகின்றோம். வாதத்துக்கு மருந்து உண்டு, பிடிவாதத்துக்கு மருந்து கிடையாது. இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இதற்கொரு மாற்றுச்சொல் இருக்கிறதா என்றால், 'ஆம் இருக்கிறது' என்னும் பதில் கிடைக்கும்.

''**ஒட்டாரம்**'' பிடிக்கிறார் என்று சொல்லிப் பார்த்தால் தெரியும். ''**ஒட்டாரம்**'' என்னும் சொல் நம்மை மெய்சிலிரிக்க வைக்கின்றது. பிடிவாதம் என்னும் சொல்லுக்கு என்ன பொருளோ அதே பொருள்தான் ஒட்டாரத்துக்கும். குழந்தைச் செல்வங்கள் அடம் பிடிப்பதைக் கூர்ந்து கவனித்தால் ஒட்டாரம் என்னும் சொல்லின் முழுப்பொருளும் நமக்கு நன்கு விளங்கிவிடும். தங்கள் விருப்பம்போல், பிறர் நடத்தல் வேண்டுமென்று எதிர்பார்ப்பதுதான் பிடிவாதம். வலியுறுத்துவதுதான் பிடிவாதம். விட்டுக்கொடுக்க மனமில்லாத நிலையே பிடிவாதம். அதுதான் ''**ஒட்டாரம்**'' ஆகும்.

''**ஒட்டாரம்**'' என்னும் சொல்லையும் நாம் உலகில் உலவ விடலாமே.

❀

இளைப்பாற்றிக் கொள்ளுதல்

நாளேடுகளில் பெரும்பாலும் நல்ல தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. ஆயினும், சில நேரங்களில் அவர்கள் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களுக்குப் பொருள் சரிவர விளங்குவதில்லை. நாசூக்காக, பவ்வியமாக, சூசகமாக போன்ற சொற்களைக் குறிப்பிடலாம். இவற்றைக் கேட்கும்போது ஓரளவு பொருள் விளங்குவதுபோல் தெரிகிறது. ஆனாலும், முழுப்பொருள் நன்கு விளங்குவதில்லை.

''**நாசூக்கு**' என்னும் சொல்லுக்கு ''**அழகு**'' என்னும் பொருள் இருக்கிறது. ''**நாசூக்காக எடுத்துரைத்தார்**'' என்று வரும்போது நயமாக எடுத்துக் கூறினார் என்று சொல்லாமே ''**ஞயம்பட உரை**'' என்று கூறினாரல்லவா ஔவைப் பிராட்டி.

''**பவ்வியம்**'' என்பது பணிவு என்று பொருள்படுகிறது. 'பவ்வியமாகப் பேசினார்' என்று சொல்லும்போது பணிவாகப் பேசினார் என்றோ, கனிவாகப் பேசினார் என்றோ எடுத்துக் கூறலாமே!

''**சூசகம்**'' என்பது ''**அறிகுறி**'' என்று பொருள்படுகிறது. நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லுதல் என்று கொள்ளலாம். அவ்வாறாயின், '**மென்குறிப்பாகத்**' தெரிவித்தார் என்பது மேன்மை நிரம்பியதாக விளங்குமே!

அறிஞர் பெருமக்கள் இன்னொரு சொல்லையும் அடிக்கடி பயன்படுத்துகின்றனர். ''**ஆசுவாசம்**'' என்பதுதான் அந்தச் சொல். 'நான் முன்னதாகச் சென்றுவிட்டேன், சிறிது ஆசுவாசப் படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினேன்' என்று கூறுகின்றார்கள். ''**ஆசுவாசம்**'' என்றால் என்ன? வடலூர் வள்ளலார் இதற்கொரு அருமையான தொடரை அருளியுள்ளார். ''**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த குளிர் தருவே**'' என்று பாடுகிறார் அவர். ''**இளைப்பாற்றிக் கொள்ளுதல்**'' என்பதுதான் நமக்குத் தேவைப்படும் இனிமையான தொடர். இத்தகைய அழகிய சொல்லாட்சிகளை நாம் பயன்படுத்தித் தமிழின் இனிமையைத் தழைக்கச் செய்யலாமே!

*

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

அடிசிலகம்

நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது ''சாப்பாட்டு வசதி எப்படி'' என்று கேட்டேன். உடனே அவர் நான் Mess-ல் சாப்பிடுகிறேன் என்று விடை கூறினார். Mess என்பதற்குத் தமிழ் என்ன என்று சிந்திக்கத் தொடங்கினேன். அகராதியைப் பார்த்தால் ''**உணவகம்**'' என்று இருந்தது. இது ஏற்கெனவே Hotel என்னும் சொல்லுக்கு ஈடாகப் பழகிவிட்டதே.

சிற்றுண்டிச் சாலைகள் நிறைய இருக்கின்றன. உணவகங்களும் நிறைய இருக்கின்றன. அலுவலகங்களில் Canteen என்னும் நிறுவன உணவகங்கள் இருக்கின்றன. சீருந்துகளில் நீண்ட பயணம் செய்வோர் தங்குவதற்கு வசதியாக Motel (Motorists. Hotel) அல்லது ''**உந்துணவகம்**'' ஆங்காங்கே இருக்கின்றன.

அவ்வாறாயின் Mess என்பது என்ன? இது, இல்லங்களில் தனியார் நடத்துகின்ற உணவகங்களாக இருக்கலாம். குறிப்பிட்டவர்கள் கூட்டாகச் சேர்ந்து தாங்களாகவே நடத்துகின்ற உணவகங்களாகவும் இருக்கலாம். பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் விடுதிகளில் Mess இருக்கின்றது. தொடக்கத்தில் இராணுவத்தினர் உண்ணுமிடமாக இருந்த இது காலப்போக்கில் பொருள் மாறிவந்துள்ளது. விலை நயமாக இருக்க வேண்டும், அடக்கமாக இருத்தல் வேண்டும். வீட்டுச் சாப்பாடு போல் சுவையாக இருத்தல் வேண்டும். இந்த நோக்கங்களுடனேயே Mess-கள் செயற்படுகின்றன.

உணவு, உண்டி, அடிசில் என்னும் சொற்கள் அழகிய தமிழ்ச் சொற்களாக அமைந்துள்ளன. வாசுகி அம்மையார் மறைவுற்ற போது தெய்வப்புலவர் திருவள்ளுவர் ஒரு பாடலைப் பாடியதாகச் சொல்லப்படுகிறது.

அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய் – அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழும் பேதையே போதியோ
என்தூங்கும் என்கண் இரா.

ஈண்டு ''**அடிசில்**'' என்னும் அரிய சொல் இடம் பெற்றுள்ளது. உணவகம், சிற்றுண்டிச்சாலை, என்பனவற்றைப் போன்று Mess என்பதை ''**அடிசிலகம்**'' என்று அகங்குளிரக் குறிப்பிட்டுக் கொண்டாடலாமே!

Mess = **அடிசிலகம்.**

❊

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

பாதுகாப்புப் பெட்டகம்

வங்கிக் கலைச் சொற்கள் ஓரளவு இன்று நன்றாகப் புழக்கத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. எனினும், அரியசொற்களை ஆக்கிக் கொடுத்த அறிஞர் பெருமக்களை நாம் மறந்து விடமுடியாது. தொடக்கத்தில் Bank என்பது ''**பாங்கு**'' என மொழிபெயர்க்கப்பட்டது. ஆயினும் இப்போது அது, மாறிப்போய்விட்டது. 'வங்கி' என்னும் சொல் வளமுற நிலைத்து விட்டது. காசோலையும் எல்லோருக்கும் தெரிந்த சொல்லாகிவிட்டது.

ஆயினும் Bank Draft ''**வங்கி வரைவோலை**'' இன்னும் சரியாகப் பழக்கத்துக்கு வரவில்லை.

Teller என்னும் ஆங்கிலச் சொல் இன்றளவும் Teller ஆகவே இருந்துவருகிறது. ''**விரைவுக் காசாளர்**'' என்னும் மொழிபெயர்ப்பு விரைந்து பழக்கத்துக்கு வரவில்லை. ''**காசு**'' என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து ''**காசாளர்**'' என்னும் சொல் பிறந்தது. அது எழுத்துப் பெயர்ப்பாக Cashier என்று மாறியுள்ளது. எனினும், நம் பெருமையை நாம் உணர்ந்துகொள்ளாமல் Cashier என்னும் ஆங்கிலச் சொல்தான் ''**காசாளர்**'' என்று மாறியது என்று கூறிக்கொண்டுள்ளோம்.

ஒரு சில வங்கிகளின் வெளிப்புறத்தில் ''**பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு**'' என்றுபெரிய எழுத்துகளில் எழுதி வைத்துள்ளார்கள். Safe Deposit Vault என்பதற்குரிய அழகிய மொழிபெயர்ப்புதான் 'பாதுகாப்புப் பெட்டகம்' என்பதாகும். இதனை உருவாக்கிய பெருமகனார், வங்கி அதிகாரியாகப் பணியாற்றிவந்த, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் ஆவார்கள். அவர்களின் திருப்பெயரை நினைந்து போற்றுவோமாக!

வீற்றிருத்தல்

''நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்''

இந்தக் குறளை உணர்ந்து படிக்கும்போது ''நாளென ஒன்று போல் காட்டி'' என்று உச்சரிக்கும் போது ''**நாட்காட்டி**'' என்னும் சொல் இயல்பாகப் பிறக்கிறதல்வா? திருக்குறள் ஒரு கருத்துப் பெட்டகம்; கவினார்ந்த கலைச் சொற்கள் நிரம்பிய பெட்டகம்.

'' எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து'.

இந்தக் குறளை இனிமையாகப் படித்து மகிழும்போது, ''**எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்**'' என்று உச்சரிக்கையில் ''**எழுதுகோல்**'' என்னும் பெயர் எளிதாகத் தோன்றுகின்றதல்லவா? வள்ளுவர், மக்களுக்கெல்லாம் மாபெரும் வழிகாட்டி. சொற்களஞ்சியத்தை வாரி வாரி வழங்கும் வழிகாட்டி.

சட்ட மொழிபெயர்ப்பில் நாங்கள் ஈடுபட்டிருந்தபோது When the Supreme Court Judge was present in the Court என்னும் தொடர் எங்கள் முன்னர் வந்து தோன்றியது. உயர்நீதி மன்றத்தை விட உயர்ந்த நிலையில் இருப்பது Supreme Court அல்லது ''**உச்ச நீதி மன்றம்**''. உச்ச நீதி மன்ற நீதியரசர் உச்சநீதி

மன்றத்திற்கு வந்திருந்த போது அல்லது அங்கு அமர்ந்திருந்தபோது என்று மொழிபெயர்க்கலாம் என்று எடுத்துக் கூறினோம். எங்கள் ஆணையத் தலைவர் நீதியரசர் மகராசன்அவர்களுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. உச்சநீதி மன்ற நீதியரசர் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர். அவர் அங்கே ''**அமர்ந்திருந்தபோது**'' என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று கூறினார். உங்களுக்குத் தெரிந்த உயர்ந்த சொல் ஒன்றிருக்கிறதே அதைப் பயன்படுத்துங்கள்' என்றும் கூறினார். வள்ளுவர் ஓடிவந்து கரம் நீட்டினார்.

'நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை'.

''நட்பிற்குச் சிறந்த நிலை அல்லது உயர்ந்த நிலை எதுவென்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்''. ஆம், உயர்ந்த சொல் கிடைத்துவிட்டது மொழிபெயர்ப்பும் ஓடிவந்துவிட்டது. ''உச்சநீதிமன்ற நீதியரசர் உச்சநீதி மன்றத்தில் வீற்றிருந்தபோது'' என்று எழுதி முடித்தோம். ''**வீற்றிருத்தல்**'' என்பதற்குப் ''**பெருமையாக அமர்ந்திருத்தல்**'' என்பதுதானே நேர்ப்பொருள்?

வள்ளுவரின் உயரத்தை யாருமே எட்ட முடியாது.

❃

வாழ்க்கைக் குறிப்புகள்

பெரிய தலைவர்கள் ''**தன் வரலாறு**'' எழுதுவார்கள். இதை Autobiography என்று கூறுகின்றோம். இத்தகைய பெரிய தலைவர்களின் ''வாழ்க்கை வரலாற்றைப்'' பிறர் எழுதுவதும் வழக்கந்தான். இதை Biography என்று வழங்குகின்றோம்.

ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்கள் ''என் வரலாறு'' என்னும் அருமையான நூலை இயற்றியுள்ளார்.

சுருக்கமான முறையில், குறிப்புகளை மட்டும் கொடுக்கும் முறை ஒன்று, இருக்கிறது. இதை Bio-data என்று கூறுகின்றோம். இதற்கு இரண்டு மொழிபெயர்ப்புகள் இருந்துவந்தன. அவை ''**தன் தகுதிக்குறிப்பு**'', ''**தன் விவரக் குறிப்பு**'' என்பனவாகும். ஒருவரது ''**அடிப்படைக் குறிப்பு**'' என்று இப்போது சொல்கின்றோம்.

ஒருவரது பெயர், பெற்றோரின் பெயர், பிறந்த ஊர். கல்வித் தகுதிகள், முன் அனுபவம், பெற்றுள்ள சிறப்புகள் முதலானவை Bio-data – வில் அடங்கியிருக்கும். வேலைக்கு விண்ணப்பம் செய்யும் போது Bio data அனுப்புக என்று கேட்பார்கள். விருதுகள் வழங்க விரும்பும்போதும் Bio-data கேட்பார்கள். இவற்றை வைத்துக் கொண்டு (Felicitation) பாராட்டுரை தயாரிப்பார்கள்.

எது எப்படியிருந்தாலும், இவை வாழ்க்கை வரலாறாக இல்லாமல், வாழ்க்கைக் குறிப்புகளாக மட்டுமே இலங்கும். இக்குறிப்புகள், கேட்கின்ற நல்ல உள்ளங்களுக்கு மகிழ்ச்சியையூட்டும். இவற்றை ''**வாழ்க்கைக் குறிப்புகள்**'' என்று சொல்லும் வகைதானே ஏற்றவகையாக இருக்கும்.

Bio-data = வாழ்க்கைக் குறிப்புகள்.

அணியம்

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் திருப்பெயரைக் கேட்டால் அறிஞர் பெருமக்கள் அனைவரும் இன்புறுவர்.

பல்லாண்டுகளுக்கு முன்னர், அவர் பயணம் செய்த பேருந்தில் யானும் தற்செயலாக ஏறினேன். இன்னொருவருடன் அவர் உரையாடிக்கொண்டே வந்தார். தூய செந்தமிழ் நடையில் அவர் பேசிக்கொண்டு வந்தார். நான் வியந்து போனேன். ''யாரிவர், யாரிவர்'' என்று ஆவலாகக் கேட்டேன். அருகிலிருந்தவர் ''சும்மா இரும், அவர்தாம் **தேவநேயப் பாவாணர்**'' என்றார். அதன் பிறகு நானும் அவரைப் போலவே பேசவேண்டுமென்று தீவிரமாக முயன்று, தோல்வி அடைந்தேன் என்றுதான் சொல்லுதல் வேண்டும்.

நீண்ட நாள்களுக்குப் பின்னர், சைவ சித்தாந்தக் கழக ஆட்சியாளர் அவர்களுடன், என் அலுவலக அறைக்குப் பாவாணர் வந்தார். வீட்டுவசதி வாரியத்தில் நான் பயன்படுத்திய ஒரு சில சொற்களை அவரிடம் ஆர்வமுடன் எடுத்துச் சொன்னேன். மனை (Ground), மனைக்கட்டு (Site), விற்பனை ஆவணம் (Sale Deed), இணைந்த இல்லம் (Flat) என்னும் சொற்களை எடுத்துச் சொன்னேன். மிகவும் மகிழ்ந்தார்.

ஒரு சமயம், நீதியரசர் மகராசன் அவர்கள் பாவாணரை நோக்கி "Precedent" என்றால் என்ன ?" என்று கேட்டார். அவர் சிறிதும் தயங்காமல், 'முற்கோள்' என்று விடைபகர்ந்தார். முன்பு கொள்ளப்பட்டது எதுவோ அதுதான் "**முற்கோள்**". எதுவாக இருந்தாலும், சரியான எடைபோட்டுத் துல்லியமான சொல்லைத் தருவது பாவாணரின் சிறப்பாகும்.

ஆயிரமாயிரம் அருந்தமிழ்ச் சொற்களை உருவாக்கிய பெருமை பாவாணருக்கு உண்டு. அவற்றுள் மிக உயர்ந்து விளங்குவது "**அணியம்**" என்னும் அழகு தமிழ்ச் சொல்லாகும்.

நீ Ready ஆக இருக்கிறாயா ? ஆம். நான் Ready ஆக இருக்கிறேன்.

நீ தயாராக இருக்கிறாயா ? ஆம். நான் தயாராக இருக்கிறேன்.

நீ ஆயத்தமாக இருக்கிறாயா ? ஆம். நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

இத்தனை சொற்களையும் தோற்கடிக்கும் முறையில் "ஆம். நான் அணியமாக இருக்கிறேன்", என்று சொல்லிக் காட்டினார் பாவாணர். "தயார் நிலையில் இருக்கிறேன்" என்பதை "**அணியம்**" என்னும் பொன்னெழுத்துகளால் பொறித்துக் காட்டினார் பாவாணர்.

தமிழ்ச் சொல்லின் தனிச்சிறப்பு

'சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா'

என்று பாடினார், **தேசியகவி சுப்பிரமணிய பாரதியார்.** பாரதியார் அவர்கள், பன்மொழிகளைக் கற்றுத் தேர்ந்த அறிஞர். அவர் கற்றுக் கொண்ட மொழிகளிலே உள்ள சொற்களையும், தமிழ் மொழியிலே உள்ள சொற்களையும், ஒப்புநோக்கிய பிறகு, தமிழ்ச் சொற்களே தரமான சொற்கள் என்னும் முடிவுக்கு அவர் வந்துள்ளார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டினை நாம் இங்கு பார்க்கலாமே!

பிறப்பு, இறப்பு என்னும் இரண்டு சொற்களையும் நாம் எடுத்துக்கொள்வோம்.

'பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதியெனும்

பெற்றியை அறிந்தாரேல்' என்று பாரதியாரே பாடுகிறார். பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு, என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம்.

''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ(டு) உயிரிடை நட்பு''.

முட்டை ஓடு, தனியே இருக்க, அதிலிருந்த பறவை பறந்து சென்று விட்டது என்று கூறுகிறார், திருவள்ளுவர். பிறப்பதும் இறப்பதும் உலகிலே இயல்பாக நடக்கின்ற செயல்கள்தாமே!

பிறப்பு என்னும் சொல்லின் முதல் எழுத்திலே, அதாவது ''**பி**'' என்னும் எழுத்திலே, மெய்யெழுத்தும் இருக்கிறது, உயிரெழுத்தும் இருக்கிறது. ஆம். உடம்பும் இருக்கிறது, உயிரும் இருக்கிறது. ஆனால், இறப்பு என்னும் சொல்லிலோ, ''**இ**'' என்னும் உயிர் மட்டும் இருக்கிறது. உயிர் அழியாதது, உடல் அழிந்தாலும் உயிர் நிலைத்து நிற்கும். இத்தனை நுட்பங்களையும் பிறப்பு, இறப்பு என்னும் இரண்டு சொற்களிலே இணைத்துக் காட்டியுள்ள நம் முன்னோர்களை நாம் வியந்து பாராட்டாமல் இருக்கமுடியுமா ?

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதை நாம் தொழுது படித்திடுதல் வேண்டும் என்னும் பாரதியாரின் கட்டளையை உளமார ஏற்று உவப்புடன் செயற்படுவோமாக!

"தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்."

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியம்

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியனார், தம்முடைய ஒப்பற்ற நூலை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று பெரும் பிரிவுகளாக வழங்கியுள்ளார். ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் இருப்பதை நாம் நன்கு அறிவோம்.

இவ்வாறு ஒன்பது இயல்களாக, அவர் அமைத்துக் கொண்ட நுட்பம், ஆய்வுக்கு உரியதாகும். கணித நூலுக்குத் துணை செய்யும் எண்களில் ஒன்பதைவிட உயர்ந்த எண் இல்லை என்பதுதான் அந்த நுட்பமாகும்.

ஒன்று என்னும் எண், பின்னங்களைத் தன்னுள் அடக்கி, பின்னர், இரண்டு, மூன்று, நான்கு என்று ஒன்பது வரை பெருகிச் செல்கிறது. அதன் பின்னர்ச் சுழியத்தை ஏற்று 10,20,30 என்று வளர்ந்து செல்கிறது.

எந்த எண்ணை எடுத்துப் பார்த்தாலும், அதில் ஒன்பதுக்கு மேற்பட்ட எண் கிடையாது. இவ்வாறே ஒவ்வோர் அதிகாரத்தின், ஒன்பது இயல்களும், எஞ்சுதல் இல்லாமல், எடுத்த பொருளை இனிது விளக்கிச்செல்கின்றன.

இயல் என்பதை ஆங்கிலத்தில் Chapter என்று கூறுவார்கள். தொல்காப்பியர் நமக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்லாமற் சொல்கிறார். ''இலக்கணக் கடல் முழுவதையும் நான் அலசி ஆராய்ந்து, அத்தனை முத்துகளையும் திரட்டி, என் நூலில் பொதிந்து வைத்துள்ளேன். இதனை எடுத்துக்காட்டவே, நான் ஒன்பது என்னும் உயர்ந்த எண்ணைத் தேர்ந்தெடுத்து, மூன்று – ஒன்பது இயல்களை உருவாக்கிக் காட்டியுள்ளேன்''.

இவ்வாறு உணர்த்தியுள்ள தொல்காப்பியரின் பெருமையைத் தொல்லுலகெங்கும் பரப்புவோமாக!

அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

நல்லாயிரம்

Millennium என்னும் சொல் இன்று எங்கணும் முழங்குகின்ற இனிய சொல்லாகத் திகழ்கின்றது. இதன் பொருள் என்ன, சிறப்பு என்ன என்னும் செய்திகளை நாம் நன்கு உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

சிலர் Millennium என்று பேசுவதைக் கேட்கின்றோம். எல்லோரையும் விட, வணிகர்கள் இந்தச் சொல்லை மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்றார்கள். விளம்பரங்கள் விதவிதமாக வருகின்றன.

ஒவ்வொரு புதிய ஆண்டு தொடங்கும்போதும் நாம், புதிய நன்மைகளை எதிர்பார்க்கின்றோம். புதிய நூற்றாண்டு பிறக்கும்போதும் அவ்வாறே ஆசைப்படுகிறோம். புதிய ஆயிரமாவது ஆண்டு பிறக்கும்போது, சொல்லவே வேண்டுவதில்லை.

அளவற்ற நன்மைகளை நாம் எதிர்பார்க்கிறோம். Millennium என்னும் சொல்லுக்கு ''**ஆயிரம் ஆண்டுகள்**'' என்னும் பொருளிருக்கிறது என்பது உண்மைதான். ஆயினும், மகிழ்ச்சி நிரம்பிய காலம், மனித மாண்புகள் சிறந்து விளங்கும் காலம், வளம் நிரம்பிய காலம் என்றெல்லாமுங்கூடச் சிறப்புப் பொருள்கள் இருக்கின்றன. ஆகவே Millennium என்னும் சொல்லை நல்ல ஆயிரம் அல்லது ''**நல்லாயிரம்**'' என்று மொழிபெயர்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

Millennium = நல்லாயிரம்

New Millennium = புதிய நல்லாயிரம்.

முதலாம் நல்லாயிரம், இரண்டாம் நல்லாயிரம், மூன்றாம் நல்லாயிரம் என்று வகைப்படுத்திச் சொல்வதற்கும் வாய்ப்பு இருக்கின்றதல்லவா ?

❋

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

கலைச் சொற்கள்

Act	-	சட்டம்
Adamant	-	ஒட்டாரம்
Admission Counsellin	-	சேர்ப்பு அறிவுரை
Administrative Language	-	ஆட்சிமொழி
Agreement	-	உடன்பாடு
Orthopaedic Department	-	எலும்பு முரிவுத் துறை
Attention	-	நிமிர்ந்து நில்
Bill	-	வடிவுச்சட்டம்
Bio-Data	-	வாழ்க்கைக் குறிப்புகள்
Booster	-	வலிமை பெருக்கி
Cabinet Maker	-	கலைக்கலன் செய்பவர்
Casual Leave	-	நேர்வு விடுப்பு
Chapter	-	இயல்
Charter	-	பட்டயம்
Chartered Account	-	பட்டயக் கணக்காளர்
Co-brother	-	உடன்–மருகர்
Colleague	-	உடனூழியர்
Command Words	-	கட்டளைச் சொற்கள்
Common Law	-	எழுதாச் சட்டம்
Commitment	-	ஏற்பிசைவு
Compact Disc	-	செறிவு வட்டு
Consultant	-	கருத்தளிக்குநர்
Contract	-	ஒப்பந்தம்
Current	-	புதிய கடிதம்
Current File	-	நடப்புக் கோப்பு

Dean	-	கலைப்புல முதல்வர்
Degree Course	-	பட்டப்படிப்பு
Diploma Course	-	பட்டயப் படிப்பு
Earmark	-	வரைந்து வைத்தல்
Enactment	-	இயற்றுச் சட்டம்
Encomium	-	புகழாரம்
Eulogy	-	மெய்ப்பு
Eyes - Left	-	இடம் பார்
Eyes - Right	-	வலம் பார்
Exhaust fan	-	வெளியேற்று மின்விசிறி
Fall - in	-	அகம் சேர்
Fall - out	-	புறம் போ
Farewell address	-	பணிநிறைவுப் பாராட்டு
Favouritism	-	காதன்மை
Felicitation	-	பாராட்டுரை
Flat	-	இணைந்த இல்லம்
Force of habit	-	பழக்கத்தின் வலிவு
Furniture maker	-	அறைகலன் செய்பவர்
Great Grand Father	-	பூட்டன்
Great great Grand Father	-	ஓட்டன்
Ground	-	மனை
Guardian	-	முதுகண்
Home	-	இல்லம்
Immunity	-	ஏமம்
Junior	-	இளவர்
Law	-	நாட்டுச் சட்டம்
Legislation	-	செய் சட்டம்

Main File	-	தலைக் கோப்பு
Main Gate	-	தலை வாயில்
Main Road	-	தலைமைச் சாலை
Matriculation School	-	பதின்நிலைப் பள்ளி
Mess	-	அடிசிலகம்
Millennium	-	நல்லாயிரம்
Motel	-	உந்துணவகம்
Opportunity	-	செவ்வி
Opthalmic Department	-	கண்ணியல் துறை
Pass book	-	கைச் சிட்டை
Pedestal fan	-	அடிப்பீட மின்விசிறி
Plan	-	அமை திட்டம்
Plot	-	மனைக்கட்டு
Precedent	-	முற்கோள்
Present	-	வீற்றிருத்தல்
Project	-	ஆகு திட்டம்
Programme	-	செய் திட்டம்
Ready	-	அணியம்
Recognition	-	அறிந்தேற்பு
Rumour	-	ஓமல்
Running File	-	தொடர் கோப்பு
Sale deed	-	விற்பனை ஆவணம்
Scheme	-	சமை திட்டம்
Secretary	-	செயலாளர்
Semester	-	படிப்புப் பருவம்
Senior	-	முதுவர்
Slow and Steady	-	பையப் பையத் தின்றால்

Wins the race	-	பனையையும் தின்னலாம்
Stand -at- ease	-	தளர்ந்து நில்
Stand-at-easy	-	ஓய்ந்து நில்
Stepney	-	சேமச் சக்கரம்
Teenage	-	பதின் பருவம்
Too high	-	சால மிகுதி
Too low	-	சாலக் குறைவு
Tribute	-	புகழ் மாலை
Under ground Drainage	-	புதை சாக்கடை
Unparliamentary Words	-	அவையல் கிளவி
Zero	-	சுழியம்